விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 மாசி 08 திங்கட்கிழமை (20.02.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 063

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஐ.நா. கூட்டத் தொடருக்கு

# 52 பேர் அடங்கிய குழு பயணம்

## நெருக்கடியை சமாளிக்க திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமை ஆணைக்குழுவின் 19ஆவது கூட்டத்தொடரில் எதிர்கொள்ளக் கூடிய நெருக்கடிகளையும் அழுத்தங்களையும் சமாளிக்கும் வகையில் 52 பேர் கொண்ட பெரிய அணியொன்றை அரசாங்கம் ஜெனிவாவுக்கு அனுப்பி வைக்கவுள்ளது. *(20ஆம் பக்கம் பார்க்க)*

## நெருப்புக் காய்ச்சலால் இளம் ஆசிரியர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நெருப்புக் காய்ச்சல் காரணமாக இளம் ஆசிரியர் ஒருவர் மரணமானார். 15 நாட்களாக யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பிரஸ்தாப ஆசிரியர் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமானார்.

மன்னார் புனித சவேரியார் கல்லூரியில் கற்பிக்கும் நாவாந்துறையைச் சேர்ந்த ரி.சி. யோன் கிலெமென்ரைன் (வயது 31) என்ற ஆசிரியரே மரணமானவர் ஆவார். (எ)

## கனடா ஆசைகாட்டி ஏமாற்றிய யாழ்ப்பாணவாசி கொழும்பில் கைது!

(கொழும்பு)

இலங்கையிலிருந்து 260க்கும் மேற்பட்டோரை கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி பல கோடி ரூபாயை பெற்றுக்கொண்டு ஆபிரிக்க நாடான டோஹோ மற்றும் மாலிக்கு கொண்டு சென்று கைவிட்ட பிரதான சந்தேக நபரை கைது செய்துள்ளதாக கொழும்பு குற்ற ஒழிப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனடாவுக்கு தொழில் வாய்ப்பினைத் பெற்றுத் தருவதாகக் கூறியே சுமார் 269 பேரை ஆபிரிக்க நாடான டோஹோவுக்கும் மாலிக்கும் அனுப்பியுள்ளார். குறித்த நபர் பற்றிய இரகசிய தகவலொன்றின் மூலம் சந்தேக நபரைப் பின்தொடர்ந்த புலனாய்வு பிரிவினர் வெள்ளவத்தையிலுள்ள விடுதியில் வைத்து அவரைக் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சி பருத்தித்துறை புலோலியைச் சேர்ந்த அருணகிரி நாதன் ஜெயரூபன் (24 வயது) என்பவரே இந்த பணமோசடி மற்றும் ஏமாற்று வேலைக்காக கைது செய்யப்பட்டவரென பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபர் வவுனியா பிள்ளையார் கோயில் வீதியிலேயே தங்கியிருந்துள்ளார். யாழ்ப்பாணத்தில் அரசசார்பற்ற நிறுவன *(20ஆம் பக்கம் பார்க்க)*

## பொலிஸ் அதிகாரம் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை

### முதலமைச்சர்கள் மாநாட்டில் தெரிவிப்பு

(கொழும்பு)

அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதே பொலிஸாரின் கடமையாகும். இதனால் பொலிஸ் அதிகாரங்கள் பற்றிக் கவலைப்பட வேண்டிய தேவை இல்லை என வடமத்திய மாகாண முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஆனால் மாகாணங்களின் அபிவிருத்திப்பணிகளை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வது குறித்து அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

முதலமைச்சர்களின் 30வது மாநாடு கண்டி ரீஜன்ஸி ஹோட்டலில் நேற்று முன்தினம் சனிக்கிழமையும் நேற்று ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்றது.

இதனையடுத்து அனைத்து முதலமைச்சர்களின் பங்குபற்றலுடன் ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்றது. இதன்போதே முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திஸாநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை பொலிஸ் அதிகாரம் தொடர்பில் கிழக்கு *(20ஆம் பக்கம் பார்க்க)*

## கஞ்சா கடத்திய விமானப்படை வீரர்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் விமானப்படை முகாமில் கடமையாற்றிய விமானப்படை வீரர் ஒருவர் கஞ்சா போதைப் பொருளை கடத்திய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட விமானப்படை வீரரிடமிருந்து 4கிலோகிராம் எடையுடைய கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் வெல்லவாயா பிரதேசத்திலிருந்து கஞ்சா கடத்தியுள்ளதாக வடமத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான உயர்பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## மற்றொரு ஆவணப்படத்தை வெளியிடத் தயாராகும் சனல் 4

### நெருக்கடியை எதிர் நோக்கும் இலங்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி மற்றுமொரு ஆவணப் படத்தை வெளியிடவுள்ளது.

இலங்கையின் கொலைக்களங்கள் எனும் ஆவணப்படத்தை வெளியிட்டு அரசாங்கத்தின் போர்க்குற்றங்களை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்திய சனல் 4 தொலைக்காட்சி இப்புதிய ஆவணப்படத்தை வெளியிடவுள்ளது.

ஜெனிவாவில் இம் மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்படவுள்ள நிலையில் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## இறைமை மறுக்கப்பட்டதாலேயே அனைத்து பிரச்சினைகளும் ஏற்பட்டன

### இரா. சம்பந்தன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழர்களுக்கு உரித்தான இறைமை மறுக்கப்பட்டதாலேயே அனைத்துப் பிரச்சினைகளும் ஏற்பட்டன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி நகரில் நேற்று நடத்தப்பட்ட ஜனநாயக அடிப்படையில் அரசியல், சமூக உரிமைகளை வென்றெடுப்பதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது.

காலை 9 மணிக்கு ஆரம்பமான கருத்தரங்கு மாலை 4.30மணிவரை நடைபெற்றது.

இதில் 13வது அரசியல் அமைப்பு தொடர்பில் யாழ் பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கே.குருபரன் இனப்பிரச்சினை மற்றும் தீர்வு *(20ஆம் பக்கம் பார்க்க)*

## நகரத்திட்டமிடல் திருத்தத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு!

(கொழும்பு)


நாடு மற்றும் நகர திட்டமிடல் திருத்தச் சட்டமூலத்தை எதிர்ப்பது என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஒன்றான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்றுத் தீர்மானித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீடத்தின் கூட்டம் கொழும்பில் நேற்று இடம்பெற்ற போதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஹாசன் அலி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் ஊடகவியலாளர்களுக்கு மேலும் கூறியுள்ளதாவது,

நாடு மற்றும் நகர திட்டமிடல் திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக மாகாண சபைகளுக்குள்ள அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றது. இதனால் சிறுபான்மை இன மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனாலேயே இச்சட்ட மூலத்தை நாங்கள் எதிர்க்கின்றோம்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் *(02ஆம் பக்கம் பார்க்க)*

# முத்தரப்பு கிரிக்கெட் ;இந்தியா படுதோல்வி



அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் 3 நாடுகள் கலந்துகொள்ளும் சி.பி.கிண்ண கிரிக்கெட் போட்டியின் 7ஆவது லீக் ஆட்டம் பிரிஸ்பேனில் நேற்று நடந்தது.

இதில் இந்தியா–அவுஸ்திரேலியா அணிகள் மோதின.

இந்திய அணியில் அஸ்வினுக்குப் ப்திலாக சகீர்கான் இடம்பெற்றார்.

சேவாக் உடற்தகுதி இல்லாததால் ஆடவில்லை.

அவுஸ்திரேலிய அணியில் மெக்காய்குப் பதிலாக டெஸ்டில் முத்திரை பதித்த ஹில் பென்ஹாஸ் இடம்பெற்றார்.

அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொன்டிங் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட முடிபு செய்தார்.

வோர்னரும், மத்யூ வேட்டும் தொடக்க வீரராகக் களமிறங்கினர்.

முதல் ஓவரிலேயே சகிர்கான் பந்தில் வேட் கொடுத்த பிடி சிலிப்பில் நின்ற டெண்டுல்கரின் கரங்களை நோக்கி வந்தது. டெண்டுல்கர் பிடியாக்க முயற்சித்த போது 2-வது சிலிப்பில் நின்ற ரோகித் சர்மா பாய்ந்து விழுந்து பிடிக்க நினைத்து பிடியை தவற விட்டார். இந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தி அவுஸ்திரேலியாவின் தொடக்க ஜோடி ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டது.

வோர்ணர் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். சகீர்கான் வீசிய ஆட்டத்தின் 9-வது ஓவரில் இவர் (2 பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 14 ஓட்டங்களை எடுத்தார். இருவரது சிறப்பான ஆட்டத்தால் அவுஸ்திரேலிய அணி 9.3 ஓவரில் 50 ஓட்டங்களைத் தொட்டது. இந்த அதிரடி ஆரம்பத்தை இர்பான் பதான் பிரித்தார்.

சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த வோர்ணர்43 ஓட்டங்களுடன் (5 பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) பதானின் பந்துவீச்சில் டெண்டுல்கரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

வோர்னரின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து அணித்தலைவர் பொன்டிங் களமிறங்கினார். அதன் பின் அணியின் ஓட்ட வேகம் குறைந்தது. பொன்டிங் 7 ஓட்டங்களுடன் சகீர்கானின் பந்தில் பதானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவுஸ்திரேலியா அணி 117 ஓட்டங்களை எடுத்தபோது தொடக்க வீரர் மத்யூ வேட் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 4 ஆவது விக்கெட்டுக்காக பீற்றர் பாரஸ்ட்– மைக்கல் ஹசி ஜோடி இந்திய பந்துவீச்சை நம்பிக்கையுடன் எதிர்கொண்டு விளையாடியது.

இருவரது சிறப்பான ஆட்டத்தால் அவுஸ்திரேலியா 41.2 ஓவர்களில் 200 ஓட்டங்களைத் தொட்டது. இருவரும் அரைச்சதம் அடித்தனர்.

இர்பான் பதான் தனது திறமையான பந்துவீச்சால் மைக்கல் ஹசியை 59 ஓட்டங்களுடனும் பாரஸ்டை 52 ஓட்டங்களிலும் ஆட்டம் இழக்கச் செய்தார்.

44ஆவது ஓவரில் அவுஸ்திரேலியா 5 விக்கெட் இழப்புக்கு 223 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது.

பின்னால் வந்த வீரர்களில் கிறிஸ்டியன் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார். வினய்குமார் வீசிய ஆட்டத்தின் 49ஆவது ஓவரில் 18 ஓட்டங்களை விளாசினார்.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் அவுஸ்திரேலியா 5 விக்கெட் இழப்புக்கு 288 ஓட்டங்களைக் குவித்தது.

கிறிஸ்டியன் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும், டேவிட் ஹசி 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் இர்பான் பதான் 3 விக்கெட்டுக்களையும் சகீர்கான், ரோகித் சர்மா தலா ஒரு விக்கெட்டும் எடுத்தனர்.

289 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் இந்திய அணி பதிலெடுத்தாடத் தொடங்கியது.

ஆரம்ப வீரர்களாக சச்சின் மற்றும் காம்பீர் களம் இறங்கினர்.ஆனால் இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக இருந்தது.ஆரம்ப ஜோடியான காம்பீர் 5 ஓட்டங்களிலும், சச்சின் 3 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர்.

அடுத்துவந்த வீரர்கள் ஹோலி, ரோகித் சர்மா களம் வந்தனர்.இவர்கள் நிலைத்து நின்று ஆடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சர்மா ஓட்டமேதும் எடுக்காமல் பிரெட் லீ பந்தில் பவுலியன் திரும்பினார்.

அடுத்து வந்த ரெய்னா, ஹோலியுடன் ஜோடி சேர்ந்து விளையாடினார்.

ஹோலி 12 ஓட்டங்களை அடித்திருந்த போது பிடி கொடுத்து வெளியேறினார்.

அதன்பின் களம் இறங்கிய அணித் தலைவர் தோனி, ரெய்னாவுடன் இணைந்தார்.இருவரும் விக்கெட்டைக் காப்பாற்றும் நோக்கத்துடன் விளையாடிவந்த போதிலும் ரெய்னா 28 ஓட்டங்களில் பிடி கொடுத்து வெளியேறினார்.

அடுத்துவந்த ஜடேஜா 18 ஓட்டங்கள் விளாசி வெளியேறினார். அடுத்ததாக வந்த பதான் தோனியுடன் ஜோடி சேர்ந்து விளையாடினார். தோனி அரைச்சதம் அடித்து நம்பிக்கை அளித்த போதும், தோனியும் 56 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்த வந்த வீரர்களும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இதனால் இந்திய அணி 43.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோல்வி அடைந்தது.


### தோனிக்கு அடுத்த போட்டியில் விளையாடத் தடை

இந்திய அணியின் தலைவர் தோனிக்கு அடுத்த போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில், இந்திய அணி பந்துவீச அதிக நேரம் எடுத்துக் கொண்டதால் தோனிக்கு இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இதனையடுத்து நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறும் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் அவர் விளையாட மாட்டார் என தகவல் வெளியாகியுள்ளது.

# பாகிஸ்தானுடனான 3-வது ஒருநாள் போட்டியிலும் இங்கிலாந்து வெற்றி



பாகிஸ்தானுக்கு எதிரான 3வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பாகிஸ்தான், இங்கிலாந்து அணிக ளுக்கு இடையிலான 3வது ஒரு நர்ள் கிரிக்கெட் போட்டி துபாயில் நேற்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிபு செய்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய முகமது ஹபீஸ் 29 ஓட்டங்களும், இம்ரான் பர்கட் 9 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனையடுத்து களமிறங்கிய உமர் அக்மல் 50 ஓட்டங்களும், சயிட் அப்ரிடி 51 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். மற்ற வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இங்கிலாந்து அணியில் ஜேம்ஸ் அண்டர்சன் 2 விக்கெட்டுக்களையும் ஸ்டிவன் பின், ஸ்டுவோட் பிரோட், இருவரும் தலா 3 விக்கெட்டுக்ளையும் வீழ்த்தினார். 50 ஓவர் முடிபில் பாகிஸ்தான் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்கள் எடுத்தது.

223 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான அணித் தலைவர் குக்கும், கெவின் பீட்டர்சனும் சிறப்பான தொடக்கத்தை வெளிப்படுத்தினர்.

குக் 80 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டமிழந்தார். அதன் பின் களமிறங்கிய மோர்கன் 24 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான கெவின் பீட்டர்சன் அபாரமாக விளையாடி 10 பவுண்டரி 2 சிக்சர் அடித்து 111 ஓட்டங்களுடனும் இறுதி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் நின்று அணியை வெற்றி பெறச் செய்தார்.

இறுதியில் இங்கிலாந்து அணி 37.2 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 226 ஓட்டங்கள் எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் அபாரமாக வென்றது.

முதல் 2 ஒரு நாள் போட்டிகளிலும் பாகிஸ்தான் இங்கிலாந்திடம் தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றி மூலம் இங்கிலாந்து 3-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

# தென்னாபிரிக்கா அசத்தல் வெற்றி; ஒரே ஆட்டத்தில் மூன்று சாதனைகள்

நியூசிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது இருபது-20 கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி வீரர் ரிச்சர்ட் லெவி ஒரே ஆட்டத்தில் 3 சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். நியூசிலாந்து- தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஆட்டம் நேற்று ஹமில்டனில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. இதனையடுத்து முதலில் களமிறங்கிய நியூசிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான நிக்கோல் 23 ஓட்டங்களும் மாட்டின் குப்தில் 47 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

20 ஓவர் முடிபில் நியூசிலாந்து அணி 4 விக்கெட் இழப்பிற்கு 173 ஓட்டங்களை எடுத்தது.

174 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் தொடக்க ஆட்டக்காரர் ரிச்சர்ட் லெவியின் அபார சதத்தால் 14 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரமே இழந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றியீட்டியது.



இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த லெவி 51 பந்துகளில்(5 பவுண்டரி 13 சிக்ஸர் உட்பட) 117 ஓட்டங்கள் விளாசினார்.

இந்த வெற்றியின மூலம் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் அதிக ஓட்டங்கள் எடுத்த கெய்லின் (117 ஓட்டங்கள்) சாதனையை சமன் செய்துள்ளார்.

நேற்று நடைபெற்ற 20ஓவர் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி வீரர் ரிச்சர்ட் லெவி 3 சாதனைகளைப் படைத்துள்ளார்.

இருபது -20 கிரிக்கெட்டில் அதிவேக சதம் (45 பந்துகளில் சதம்), அதிகமான சிக்ஸர் (13 சிக்ஸர்), தனிநபர் அதிகபட்சம் 117 ஓட்டங்கள் (ஆட்டமிழக்காமல்) ஆகிய 3 சாதனைகளை ரிச்சர்ட் லெவி ஒரே ஆட்டத்தில் நிகழ்த்தியிருக்கின்றார்.

இதற்கு முன்னர் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் 1 : 1 என்ற கணக்கில் இரு அணிகளும் சமநிலையில் உள்ளன.

# நகரத்திட்டமிடல்...

தீர்வைக் காண்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்படவுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாகவே நாடுமற்றும் நகர திட்டமிடல் திருத்தச் சட்ட மூலத்திற்கு தீர்வுகாண வேண்டும்.

எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபையில் நாடுமற்றும் நகர திட்டமிடல் திருத்தச் சட்ட மூலம் முன்வைக்கப் பட்டால், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அதனை எதிர்த்தே வாக்களிப் பார்கள் என ஹாசன் அலி தெரிவித்துள்ளார்.

இந் நிலையில், இச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் ஆளும் தரப்பில் உள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்கள் கேட்டபோது அப்போதும் எதிராகவே வாக்களிப் போம் என அவர் குறிப்பிட்டார். (எ-11)

# இன்று ஒரு தகவல்

## கடவுளும் மனிதனும்

ஓர் ஊரிலே ஒரு நல்ல மனிதர் இருந்தார்.

அவருக்கு ஒரு சந்தேகம். இந்த உலகத்திலே எல்லா உயிர்களையும் கடவுள் படைத்தார் என்று சொல்கிறார்கள்.

அப்படி இருக்கும் போது ஏன் பாகுபாடு?

சில பேர் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். சில பேர் மகிழ்ச்சியற்ற நிலையில் உள்ளனர்.

ஏன் இந்த வித்தியாசம்?

இதுதான் அவருடைய சந்தேகம்.

இந்த சந்தேகத்தை யாரிடம் கேட்பது? கடவுளிடம் கேட்டால் தான் சரியான விடை கிடைக்கும்.

ஒருநாள் கடவுள் காட்சி கொடுத்தால் அப்போது அவரிடம் கேட்போம் என்று நினைத்தார்.

இப்படியாக அவர் நினைத்தவுடனே கடவுள் அவர் முன்னால் வந்து நின்றார்.

"என்ன உன்னுடைய சந்தேகம்?" என்றார்.

இவருக்கு இன்ப அதிர்ச்சி.உடனே நீண்டநாள் சந்தேகத்தை அவரிடம் கேட்டார்.

''கடவுளே! உயிர்களை எல்லாம் மகிழ்ச்சியாக வாழ்வதற் காகத்தானே நீங்கள் படைத்தீர்கள்? ஆனால் யாருக்கும் நீங்கள் மகிழ்ச்சியைக் கொடுப்பதாகத் தெரியவில்லையே..?" என்றார்.

இதற்குக் கடவுள் சொன்னார், '' மக்கள் என்னிடம் எதைக் கேட்கிறார்களோ அதைத்தானே என்னாலே கொடுக்கமுடியும்."

இவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை.இதைக்கடவுள் விளங்கிக் கொண்டார்.

''இதோபார்... நீ ஒருநாள் என் கூடவே இரு... நீ இருக்கிறது மக்கள் கண்ணுக்குத் தெரியாமல் நான் பார்த்துக்கொள்கிறேன்.என்னிடம் வருகிறவர்கள் என்ன கேட்கிறார்கள் என்பதை நீயே கேட்டுக்கொள்" என்றார்.

சரி என்று சொல்லி இவரும் அவருக்குப் பக்கத்திலே இருந்து விட்டார்.

பக்தர்கள் ஒவ்வொருவராக வரத்தொடங்கினார்கள். முதலில் வந்தவர் "நான் செய்யும் வியாபாரத்திலே எனக்கு ஒரு இலட்சம் ரூபா கிடைக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

மற்றையவர் வந்தார்."எனக்கு ஒரு வேலை கிடைக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

அடுத்த படியாக வந்தவர் ''எனக்கு நிறைய தங்க நகைகள் வேண்டும்" என்றார்.

ஒரு பையன் வந்தான்.''நான் பரீட்சையிலே சித்தியடையவேண்டும்" என்று கேட்டான்

இப்படியேதான் எல்லோரும் கேட்கிறார்களே தவிர இயற்கை கொடுத்திருக்கின்ற இந்த வாழ்நாளை இனிமையாகவும் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் செலவு செய்ய வேண்டுமென யாரும் கேட்கவில்லையே!

இறைவன் அருகிலே நின்று கொண்டிருந்த மனிதனைப் பார்த்தார்.

அந்த மனிதனுக்கு பதில் கிடைத்தது.ஒன்றுமே பேசா மல் புறப்பட்டு போய்விட்டார்.

இயற்கையின் நோக்கம் புரியாமல் வாழ்கிற வாழ்க்கை இருக்கிறதே... அது நிம்மதியாக இருக்காது. மகிழ்ச்சியாக அமையாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அம்பன் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி தேவை

## மக்கள் கோரிக்கை

(பருத்தித்துறை)

வடமராட்சி அம்பன் வைத்தியசாலைக்கு நிரந்தரமாக அம்புலன்ஸ் வண்டி ஒன்றை வழங்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்குறித்த வைத்தியசாலை யுத்த நடவடிக்கைகளால் சேதமடைந்து தற்போது வைத்தியசாலையின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலைக்கென வழங் கப்பட்டிருந்த அம்புலன்ஸ் வண்டி மீளப் பெறப்பட்டிருப்பதனால் அவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இதனால் அவசர நோயாளி ஒருவரை மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத் திற் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டு மென அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

(அ-3-40)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

கலை ஆபரணம் கோட்டை வீதி, கொல்லங்கிராய் வீதி ஆகியவற்றை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மறவன்புலோ, கோயிலாக்கண்டி, தச்சன்தோப்பு மற்றும் தென்மராட்சி தெற்குப் பகுதி மக்கள் சாவகச்சேரிக்கு செல்வதற்கு இவ் வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

இப்பாதையால் சாவகச்சேரிக்கு பயணம் செய்யும் போது குறுகிய நேரத்தில் செல்ல முடிகின்றது.

மீளக்குடியேறிய 450 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மேற்படி பகுதிகளில் வசிக்கின்றனர். இவ்வீதிகள் குன்றும் குழியுமாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் இருப்பதால் நாவற்குழி ஊடாக அல்லது தனங்கிளப்புச் சந்தி ஊடாகவே சாவகச்சேரிக்கு செல்ல வேண்டியுள்ளது.

மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட போது புனரமைக்கப்பட்ட கலை ஆபரணம் கோட்டை வீதி உரிய முறையில் பராமரிக்கப்படாமையினால் மிகவும் சேதமடைந்துள்ளது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-29)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 45 | 50 | 60 |
| தக்காளி | 25 | 30 | 25 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 35 |
| கோவா | 30 | 20 | 30 |
| கரட் | 40 | 60 | 30 |
| பூசணி | 35 | 30 | 40 |
| புடோல் | 20 | 60 | 30 |
| வாழைக்காய் | 40 | 30 | 45 |
| சின்ன வெங்காயம் | 70 | 40 | 50 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 80 | 40 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | - | 60 | - |
| பயற்றங்காய் | 140 | 100 | 110 |
| லீக்ஸ் | 70 | 80 | 70 |
| பீற்றூட் | 20 | 20 | 30 |
| கறிமிளகாய் | 70 | 60 | 40 |
| முருங்கைக்காய் | 550 | 300 | - |
| போஞ்சி | 30 | 30 | 25 |
| கத்தரிதம்புள்ள | 25 | 20 | 15 |
| கீரை - 1 பிடி | 5-8 | 10 | 10 |
| தேசிக்காய் | 30-40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 20 |
| வெங்காயப்பூ | 40 | 90 | 80 |

# இராசி பலன்

20.02.2012

(மாசி 08,திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 4.23 மணிவரை
திருவோணம் பின்னிரவு 12.07 மணிவரை
இராகுகாலம் 7.02-9.32 மணிவரை
சுபநேரம் 12.32-2.02 மணிவரை
அமிர்தசித்தம்,மகாசிவராத்திரி விரதம்

**மேடம்** இனிமையான நாள், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், தொழிலில் உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ் வீர்கள், ஆரோக்கியமான

**இடபம்** அதிகம் செலவாகும் என நினைத்தகாரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், பிரியமானவர்களோடு ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள்.

**மிதுனம்** யோகங்கள் ஏற்பட யோசித்துச் செய்யவேண்டிய நாள், சில பிரச்சினைகளைக்கண்டும் காணாமல் இருப்பது நல்லது, சேமிப்புக்கள் கரையும் அளவிற்கு திடீர்ச் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்** விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிபுக்கு வரலாம், அன்பு நண்பர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், வராத உறவினர்கள் திடீரென உங்கள் வீடுகளுக்கு

**சிங்கம்** போராட்டங்களுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோய்களிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், இனத்தார் பகை மாற எடுத்த

**கன்னி** மாமன் மைத்துனர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் பெருகும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், அரசு வழிச்சலுகைகள்

**துலாம்** பெற்றோர் வழியில் பிரியம் கூடும்,நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்,வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** பாராட்டும் புகழும் அதிகரிக்கும் நாள்,வருமானம் அதிகரிக்கும்,தொழில் முன்னேற்றத்திற்கு பெண்வழி ஒத்துழைப்பு கிடைக்கும்,கௌரவமான நாள், முயற்சி கைகூடும்.

**தனுசு** தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய ஆசை ஒன்று நிறைவேறலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் ஏற்படும், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** சிவாலய வழிபாட்டால் சிறப்பினைக் காணவேண்டிய நாள், நீண்டநேரம் பணிபுரிய நேரிடலாம், கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்** பயணாளிகளால் பலனுண்டு, சொந்த தேவைகளுக்காக சில செலவுகளைச் செய்ய முன்வருவீர்கள், இறை வழிபாட்டில் நாட்டம் செல்லும், சிறிய வேலை ஒன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம்.

**மீனம்** வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்,பணப்புழக்கம் அதிகரிக்கும்,நட்பு வட்டம் விரிவடையும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு.

வளவன்

# பயணிகள் பேருந்துகளில் சில்லறை முரண்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் விலையேற்றத்தினையடுத்து பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் பயணிகளுக்கும், பஸ் நடத்துநர்களுக்கும் இடையே சில்லறை முரண்பாடுகள் ஏற்படுவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் முரண்பாடுகள் வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்களிலும் மற்றும் தனியார் பஸ்களிலும் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பஸ் கட்டணங்கள் 20 வீதத்தால் அதி கரிக்கப்பட்டதுடன் ஆகக் குறைந்த கட்டணமாக 9 ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டது. எனினும் ஆகக் குறைந்த கட்டணமாக 9 ரூபாயினை செலுத்துவோர் 10 ரூபாயினைக் கொடுத்தால் மீதி ஒரு ரூபாய் நடத்துநர்களால் வழங்கப்படுவதில்லை.

இதனை கேட்க முற்படும் போது நடத்து நர்களுக்கும் பயணிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுவதுடன் நடத்துநர்கள் தகாத வார்த்தைகளால் பேசுவதாகவும் முறையிடப்பட்டுள்ளது.

ஒரு ரூபாய் குறைவாகக் கொடுத்தால் வாங்க மறுக்கும் நடத்துநர்கள் மீதி ஒரு ரூபாயினை தர மறுப்பது எந்த வகையில் நியாயம் என பயணி ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்களில் மூன்று, நான்கு ரூபாய் மீதி வந்தாலும் அதனை நடத்துநர்களிடம் இருந்து பெறமுடிவதில்லை எனவும் பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை சரியான பஸ்கட்டணங்களை தெரிந்து கொள்வதற்கு தனியார் பேருந்துகளைப் போன்று வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களிலும் கட்டண விபரம் ஒட்டப்பட்டிருக்க வேண்டும் எனவும் பயணி கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-4)

# எரிபொருள் விலையேற்றத்தால் மோசமான நிலையில் மக்கள்!

## பிரபா கணேசன் அரசுக்கு அட்வைஸ்



(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றத்தினால் இன்று மக்கள் மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்து நிதானத்தை கடைப்பிடித்திருக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இன்றைய எரிபொருள் விலையேற்றத்தினால் மக்கள் சொல்லொணா துயரத்திற்குள்ளாகியுள்ளனர். உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளமை உண்மையே. இருப்பினும் சுமார் 40 வீதம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளமை மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீதுள்ள நம்பிக்கையை கேள்விக் குறியாக்கியுள்ளது.

அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் இதை சொல்வதற்கு நான் தயங்கவில்லை. எரிபொருள் விலையேற்றத்தில் அரசாங்கம் நிதானப் போக்கை கடைப்பிடிக்க தவறியுள்ளது.

இன்று 40 வீதம் விலையேற்றத்தை அதிகரித்த பின்னர் போக்குவரத்திற்கும், மீனவர்களுக்கும், முச்சக்கரவண்டி ஓட்டுநர்களுக்கும் மானியம் அளிப்பதன் மூலம் ஒரு போதும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தை தடுக்க முடியாது.

அளிக்கப்படும் மானியங்கள் சரியான முறையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு சென்றடையாது. இதன் மூலம் ஊழல் மோசடிகள் இடம் பெறுவதற்கே வாய்ப்புக்கள் அதிகமாகியுள்ளன. இன்று மானியங்களை வழங்குவதை விட விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தியிருந்தால் இன்றைய போராட்டங்களை தவிர்த்திருக்கலாம்.

அதேநேரம் நாட்டிற்கு வருமானத்தைக் தேடிக்கொடுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித மானியங்களும் வழங்காமை அவர்களுக்கு இழைக்கும் பாரிய துரோகமாகும். மின்சார கட்டணம் 40 வீதம் அதிகரிக்கப்பட்டிருப்பது மக்களின் வயிற்றில் அடிக்கும் செயலாகும். இப்படியான செயல்பாடுகள் மூலமாக அரசாங்கத்திற்கு நெருக்கடிகள் ஏற்படுகின்றன.

எதிர்க் கட்சிகளின் கரம் ஓங்குவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. யுத்த வெற்றியை வைத்து அரசாங்கம் பெற்றுள்ள சிங்கள மக்களின் ஆதரவு அசைக்கப்படுவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு விலையேற்றங்களை அரசாங்கம் மீள் பரிசிலனை செய்ய வேண்டும்.

மேலும், அலரி மாளிகையில், எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை பாராளுமன்றத்தில் அரசாங்கத் தரப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் அவசரக் கூட்டத்திற்கு தானும் அழைக்கப்பட்டிருப்பதாகவும் இந்தக் கூட்டத்தில் எரிபொருள் விலையேற்றத்தினால் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அதிருப்தியை தெரிவிக்கப் போவதாகவும் பிரபா எம்.பி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# மின்னஞ்சல்களை கட்டுப்படுத்த இலங்கையில் போதிய சட்டங்கள் இல்லை

## தொலைத்தொடர்பு ஆணைக்குழு தெரிவிப்பு

இலங்கையில் இணையத்தள பாவனையாளர்களுக்கு வேண்டப்படாமல், தானாக வந்து குவியும் மின்னஞ்சல்கள் பெரும் பிரச்சினையாக இருந்த போதிலும் இவ் விடயத்தில் அவர்களுக்கு உதவுவதில் தமக்கு அதிகமாக எதுவும் செய்யமுடியாதுள்ளதாக இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இத்தகைய தேவையற்ற (ஸ்பாம்) மின்னஞ்சல்கள் தொடர்பாக பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எனினும் இதற்கான முழுமையான தீர்வு இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவிடம் இல்லை எனவும் அவ் ஆணைக் குழுவின் தலைவர் அனுஷ பெல்பிட்ட கூறினார்.

தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் சனத் சிறிவர்தன இது தொடர்பாகக் கூறுகையில், தேவையற்ற மின்னஞ்சல்களைத் தடுக்கும் தொழில்நுட்பம் அமெரிக்காவில் உள்ளதாகவும் ஆனால் இலங்கையில் இல்லை எனவும் கூறினார்.

இத்தகைய் ஸ்பாம் மின்னஞ்சல்கள் தொடர்பான சட்டமும் இலங்கையில் இல்லை.

தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றின் சிரேஷ்ட பொறியியலாளர் பிரதீப் கொடிதுவக்கு கூறுகையில்;

தெற்காசிய நாடுகளில் வேண்டப்படாமல் வரும் மின்னஞ்சல்கள் பெரும் பிரச்சினையாக உள்ளதாகக் கூறினார். அனுமதியற்ற சிலர் எமது மின்னஞ்சல் முகவரிகளைப் பெற்றுக் கொண்டு மின்னஞ்சல்களை அனுப்புகின்றனர். ஹெக்கர்களும் மின்னஞ்சல் முகவரிகளை பெற்றுக்கொள்ளக்கூடும். வடிகட்டல்முறை ஒன்றை உட்புகுத்துவது சிறந்தது என அவர் கூறினார்.

இது தொடர்பாக அதிக முறைப்பாடுகள் கிடைத்தபோதும் உரிய சட்டங்கள் இல்லாததால் நடவடிக்கை மேற்கொள்ளமுடியாதுள்ளதாக இலங்கைக் கணனி அவசர கால மற்றும் தயார் அணியின் (SLERT) பிரதம பொறியியலாளர் ரோஹண பள்ளியகுரு தெரிவித்தார். (எ-11)

# மோ.சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்து ள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் குருநகர் கொய்யாத்தோட்டம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பாசையூர் அந்தோனியார் கோவிலடியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ரஞ்சித் மரியதாஸ் (வயது 37) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் ஆவார்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதி பிரஸ்தாப நபர் தலையிலும்; மார்புப் பகுதியிலும் பலத்த காயங்களுக்கு உள்ளாகியதாலேயே இவ் மரணம் சம்பவித்ததாக மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4;3;26)

# கிணற்றில் இருந்து சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

தம்புள்ளை கிரிக்கெட் மைதானத்திற்கு அருகிலுள்ள கிணறொன்றில் வீழ்ந்து இருவர் பலியாகியுள்ளனர். இந்த சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம் பெற்றது.

இருவரின் மரணம் தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ரத்னபால பெரேரா (வயது56), எம். இந்திக (வயது 32) ஆகியோரே இவ்வாறு மரணமடைந்தவர்கள் ஆவார்.

நீதிமன்ற விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக சடலங்கள் தம்புள்ளை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (எ-11)

# கோ பூசை

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரி தினமான இன்று அராலி தெற்கு அகாயகுளம் விநாயகர் ஆலயத்தில் மாலை 5.30 மணிக்கு கோ பூசை, கோ பவனி அனுமாரட்டியிலிருந்து விநாயகர் ஆலயம் வரை நடைபெறும் சிவராத்திரி விரத கால நிகழ்ச்சி கூட்டுப் பிரார்த்தனை சிறப்புச் சொற்பொழிவுகள் என்பனவும் இடம்பெறும். (எ-11)

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

தவறிவிட்டது
மீசாலை மேற்கு மீசாலை எனும் முகவரியினையுடைய முருகையா விக்னேஸ்வரன் என்பவரது தே.அ.அ. (770163757V) சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
T.P.:- 0779179858
(7537)


வேலை வாய்ப்பு
யாழ் நெல்லியடியில் புதிதாக திறக்கப்படவிருக்கின்ற பல்லின வியாபார நிறுவனத்திற்கு விற்பனைப்பிரதிநிதி பயிற்சிக்காக ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.
தகைமை:- O/L. வயதெல்லை:- 24ற்கு கீழ்ப்பட்டோர்.
சம்பளம்:- பயிற்சிக்காலத்தில் ரூ. 15000/- மும், போக்குவரத்திற்காக ரூ.2000/- மும் வழங்கப்படும்.
தேவைப்படுவோர்:- 10 பேர் மாத்திரமே.
குறிப்பு:- வடமராட்சியைச் சேர்ந்தோர் விரும்பத்தக்கது.
அழைக்க வேண்டிய இலக்கம்: 077 133 2763
(7529)

உடனடி வேலைவாய்ப்பு
Management Trainee (2012/2013)
கனடாவை தலைமை அலுவலகமாக கொண்டு சர்வதேச ரீதியில் இயங்கும் அதன் இலங்கையின் வடமாகாண (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்) கிளைகளுக்கு முகாமைத்துவப் பயிற்சிக்கு (Management Trainees) ஆட்கள் தேவை.
O/L, A/L சித்தியடைந்தவர்கள், தொழிலை எதிர்பார்த்து காத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.
(ஆண்கள் 18 - 30 வயதுக்கு உட்பட்டவர்கள்)
- பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
- பயிற்சியின் போது கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- பயிற்சியின் பின்னர் மாதாந்தம் 50000/- மேல் பெறலாம்.
- பயிற்சியின் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படும்.
- பயிற்சி காலம் : 3 - 6 மாதங்கள் மட்டும்.
தொடர்புகளுக்கு: 0777274795, 0244907449
தொடர்பு நேரம்: 10.00 AM - 12.00, 2.30 PM - 5PM
(7534)

## மரண அறிவித்தல்

### T.C. யோன் கிலெமன்ரைன்

**(ஆசிரியர், புனித சவேரியார் கல்லூரி, மன்னார்)**



27, சேமக்காலை வீதி, நாவாந்துறை வடக்கை பிறப்பிடமாகவும், மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட T.C. யோன் கிலெமன்ரைன் (ஆசிரியர், புனித சவேரியார் கல்லூரி, மன்னார்) நேற்று 19.02.2012 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் போதகர்-கிறிஸ்ரி-மரியம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும், செலஸ்ரினாவின் அன்புக் கணவரும், T.C. பிறின்ஸ் அன்டசனின் அன்புத் தந்தையும், T.C. மேரி ஆன், T.C. அன்று அவர்களின் அன்புமிகு சகோதரரும், சூசையப்பு-விக்டோரியா தம்பதியரின் பாசமிகு மருமகனும் அருட்சகோதரி ஜெபசீலி (பெரு), அல்பிரட் (கட்டார்), அருட்தந்தை S.A. பொன்சியன் (சரஸ்வதி மகா வித்தியாலயம் திருகோணமலை), திருமதி அமலசீலி, திருமதி சிசிலியம்மா, அருட்சகோதரி நிதர்சனா (கார்மேல்மடம் கல்முனை), சில்வெஸ்ரர் (மன்னார் கருங்கண்டல் மகா வித்தியாலயம்), திருமதி மரியரோசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும்.

27, சேமக்காலை வீதி, நாவாந்துறை. (7538)

தகவல்: தந்தை தோமஸ் கிறிஸ்ரி
தொ.இல.: 0773698202, 0776688757

# ஆணைக்குழுவின் அறிக்கைக்கு பதில் அறிக்கை விட்டார் ரணில்

## கதிகலங்கினார் ஜனாதிபதி

பாகிஸ்தானுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க வெளியிட்ட அறிக்கை கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுதகவல் வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்த வார இதழ் வெளியிட்டுள்ள தகவல் வருமாறு,

இரண்டுநாட்கள்பயணமாக பாகிஸ்தான் சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி இஸ்லாமாபாத்திலுள்ள செரீனா விடுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை தங்கியிருந்த போது கொழும்பில் இருந்து கிடைத்த தகவலை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரியப்படுத் தினார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் 10 பக்கங்கள் அடங்கிய அறிக்கையை ஐ.தே.க தலைவர் ரணில் விக்ரமசிங்க வெளியிட்டுள்ளதாக அவர் கூறினார்.அதே அறிக்கையை இலங்கை ஜனாதிபதிக்கு ஒரு நாள் முன்னதாக விக்ரமசிங்க அனுப்பியிருந்தார்.

ஆனால்,அப்போது அவர் பாகிஸ்தான் புறப்பட்டிருந்தால் அந்தக் கடிதம் பிரிக்கப்படாமல் கொழும்பிலேயே இருந்தது. அவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் தொடர்ந்தது.

அதையடுத்து இலங்கை ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க கொழும்பில் இருந்த ஐ.தே.க. முன்னாள் தவிசாளரும் ரணில் விக்ரமசிங்கவின் நம்பிக்கைக்குரியவருமானமலிக்சமரவிக்கிரமவைதொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

ஐ.தே.க வின் அறிக்கை தொடர்பான இலங்கை ஜனாதிபதியின் கவலையை சுருக்கமாக கூறிய லலித் வீரதுங்க, தொலைபேசியை வெளிவிவகார அமைச்சர் பீரிஸிடம் கொடுத்தார். பீரிசும் தனது கவலையை அவரிடம் தெரியப்படுத்தி விட்டு இலங்கை ஜனாதிபதியிடம் தொலைபேசியை கொடுத்தார்.

விக்ரமசிங்க ஏன் இப்படி செய்கிறார் என்று மலிக் சமரவிக்ரமவிடம் கேட்டார். மகிந்த ராஜபக்ஷ இந்தப் பதில் ஒன்றே இலங்கை விவகாரத்தை அனைத்துலக மயப்படுத்தப் போதும் என்று ராஜபக்ஷ கூறினார்.

பின்னர் இந்த விவகாரத்தை ரணிலுக்கு எடுத்து சொன்னார் மலிக் சமரவிக்ரம நாடாளுமன்றத்தில் தான் வெளியிட்ட அறிக்கை உடனடியாகவே தாக்கத்தை ஏற்படுத்தியதையிட்டு ரணில் விக்ரமசிங்க மகிழ்ச்சியடைந்தார் என அதில் கூறியுள்ளது.

இதற்கிடையே ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்தியாவின் மூத்த இராஜதந்திரிகளுடனான மதிய உணவுக் கலந்துரையாடல் ஒன்றை அடுத்தே இந்த அறிக்கை வெளியிட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-2)

## சிவராத்திரி விழா

கல்வியங்காடு ஸ்ரீ வீரபத்திரர் ஆலயமஹா சிவராத்திரி விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அத்தோடு இரவு நான்கு சாமப் பூசைகளும் விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெறும். சிறப்பு நிகழ்வாக இரவு 9 மணிக்கு கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா மாங்கனி பெற்ற மங்கை பற்றி சிறந்த பக்க வாத்தியத்துடன் இசைச் சொற்பொழிவாற்றுவார். (அ)

# ஈழத்து சிதம்பரத்தில் சிவராத்திரி விழா


(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் சிவராத்திரி விழா இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு காரைநகர் சிவன் கோவிலில் இந்து சமய கலாசார உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.இதில் ஆசியு ரையினை ஆலயபிரதம குருவும் வாழ்த்துரையினை ஆலய தர்மகர்த்தா மு.சுந்தரலிங்கம், சிறப்புரை யினை காரைநகர் பிரதேசசபை உறுப்பினர் வீ. கண்ணன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

அத்தோடு உளவள துணையாளர் ந.நவராஜ் சிவராத்திரியும் ஆன்மீக விழிப்பும் எனும் தலைப்பிலான சிறப்பு சொற்பொழிவினையும் ஆற்றவுள்ளார் தொடர்ந்து அறநெறி பாடசாலைகளின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (அ-2)

# ராஜபக்ஷக்களுக்கு அரசியல் சமாதி கட்டி விட்டு மகனை தலைவர் ஆக்கத் துடித்தார் சந்திரிகா!

## விக்கிலீக்ஸ் தகவல்



(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரகட்சியின் தலைமைப் பொறுப்பு மகன் விமுக்திக்கு வந்து சேர வேண்டும் என்று சந்திரிக்கா பண்டாரநாயக்கா விரும்பினார் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. குடும்ப ஆட்சியை நிலைநாட்டுகின்றமை தொடர்பாக இவருக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் ஒரு பனிப்போரே இடம்பெற்று வந்திருக்கின்றது.

இலங்கை அரசியலில் மிகுந்த பலம் வாய்ந்தது பண்டாரநாயக்க குடும்பம். ஆனால், பண்டார நாயக்க குடும்பம் அரசியலில் ஈடுபட்ட காலம் தொடக்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் போட்டியாக இன்னொரு குடும்பம் வந்து இருக்கின்றது என்றால் அது ராஜபக்ஷ குடும்பம்தான்.

இதனால் ஜனாதிபதியாக இருந்தபோது சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவுக்கும் அன்றைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் எப்போதும் கசப்பான உறவே காணப்பட்டு வந்திருக்கின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டமையை அடுத்து என்றும் இல்லாதவாறு இக்கசப்பான உறவு மிக மோசம் அடைந்தது.

மஹிந்தரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியவர் சந்திரிகாதான். சந்திரிகாவின் மனதில் வேறு திட்டம். மஹிந்தவை இத்தேர்தலில் தோல்வி காண்கின்ற பட்சத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பலவீனமான நிலையில் உள்ளது என அறிவித்து மகன் விமுக்தியை கட்சியின் தலைவராக நியமிக்க உத்தேசித்து இருந்தார். மகன் மூலம் குடும்ப ஆட்சி தொடர வேண்டும் என்று எதிர்பார்த்து இருந்தார்.

மஹிந்தவோ பிள்ளைகள் மூவர் மூலமாகவும் குடும்ப ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணி இருக்கின்றார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மைத்துனிகளில் ஒருவரான நிருபமா ராஜபக்ஷ இவ்விபரங்களை கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கு சொல்லி இருக்கின்றார்.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து 2005 ஆம் ஆண்டு செப்டெம்பர் 30 ஆம் திகதி அமெரிக்க வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பப்பட்ட இராஜதந்திர ஆவணம் ஒன்றின் மூலம் விக்கிலீக்ஸில் பதிவாகியிருக்கிறது. (அ-2)

# நீரற்ற நீர்த்தாங்கிகள் இருந்தும் என்ன பயன்

## மக்கள் ஆதங்கம்

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச சபையினால் கரணவாய் செல்வாபுரம் கிராமத்திற்கு இரு நீர்த்தாங்கிகள் வழங்கப்பட்டபோதும் நீர் நிரப்பப்படாமையால் மக்கள் நீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கரணவாய் செல்வாபுர கிராமத்தில் நீண்டகாலமாக குடி நீர் பிரச்சினை தீர்க்கப்படாமலே உள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் பலர் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதனால் இரு குடி நீர்த்தாங்கிகளை கரவெட்டி பிரதேசசபை வழங்கியிருந்தது.

ஆனால், தற்பொழுது நீர் நிரப்பும் தாங்கிகளில் குடிநீர் இல்லாமையால் அப்பகுதியில் மீண்டும் குடிநீர்ப்பற்றாக்குறை உள்ளதென அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(அ-3-24)


யாழ் நகரில்!

வாடகைக்கு

கார்கள், வான்கள்

Rent a Car



- சாரதியுடன் வாகனம்
- சாரதியில்லாமல் வாகனம்
- திருமண வைபவங்கள், சுற்றுலாக்களுக்கு
- வெளியூர் பயணங்களுக்கு
- கார், வான், கனரகவாகனங்கள்
- வாராந்த மாதாந்த வாடகைக்கு

K.J Enterprises

(7525)

105/06, சி.பொன்னம்பலம் லேன்,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Hotline : 0759463632, 0750422904
Office : 021 320 2198

# யாழ். நோக்கிய இராஜதந்திரிகளின் படையெடுப்புக்கு காரணம்தான் என்ன?

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை இந்த வருட முற்பகுதியில் சற்று அதிகமாகவே காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக அறிந்து செல்வதற்கு இதுவரை 70 இற்கு மேற்பட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் வருகை தந்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 4 ஆம் திகதி இரண்டு நாட்கள் விஜயத்தை மேற்கொண்ட பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் வார்ட்டன் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தனர்.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினர்.

மறுநாள் 5 ஆம் திகதி யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடினார். அத்துடன் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களையும் சந்தித்து கலந்துரையாடியதோடு மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளையும் பார்வையிட்டுச் சென்றனர்.

9 ஆம் திகதி கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரும் பல் பண்பாட்டலுவல்களுக்கான செயலாளருமான சுங்கன் லியூஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோய் டானியல் மற்றும் இவர்களது உதவியாளர்கள் அடங்கிய குழுவினர் வருகை தந்திருந்தனர்.

யாழ்.ஆயர், யாழ்.அரச அதிபர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினர். இதனிடையே இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார்.

இந்திய நிதியுதவியுடன் அரியாலை நாவலடிப்பகுதியில் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்ட வீடுகளை கையளிக்கும் நிகழ்விலும் 10 ஆயிரம் துவிச்சக்கர வண்டிகளை கையளிக்கும் ஆரம்ப நிகழ்விலும் அவர் பங்கு கொண்டிருந்தார்.

23 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல் கலாம் வருகை தந்தார்.

இம்மாதம் 5 ஆம் திகதி 60 இற்கு மேற்பட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் குடாநாட்டின் நிலைவரத்தை அறிந்து செல்வதற்காக வருகை தந்திருந்தனர். சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்காக இலங்கை வந்த இவர்கள் யாழ்ப்பாணத்திற்கும் வருகை தந்திருந்தனர்.

யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் வடமாகாணத்தில் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்பு மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளை ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இலங்கைக்கு எடுத்துரைத்தார்.

இதன்போது இராஜதந்திரிகளும் கேள்விகள் எழுப்பியிருந்தனர். இந்தியாவின் நிதியுதவியுடன் அமைக்கப்படும் வீடுகளை யாழ். அரச அதிபருடன் சென்று இவர்கள் பார்வையிட்டனர். 8 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அதிகாரியும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் போர்க் குற்ற விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் ஸ்ரீபன் ரப் வருகை தந்திருந்தார்.

காணாமல் போனோர் தொடர்பில் விபரங்களை கேட்டறிவதில் ஆர்வம் காட்டினார் என யாழ்.அரச அதிபர் கூறியிருந்தார். ஜேர்மன் மற்றும் பிரிட்டிஷ் நாட்டவர்கள் 16 ஆம் திகதி வருகை தந்திருந்தனர். இதில் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுநலவாய நாடாளுமன்ற தலைவருமான சேர் அலன் ஹாஸ்செல் ரஸ்ஸி இரண்டு நாட்கள் தங்கியிருந்தார். அதே நாளில் ஜேர்மன் நாட்டு வெளி விவகார அமைச்சின் உயரதிகாரிகளான அந்நாட்டு கூட்டாட்சி குடியரசின் தூதுவர் ஜென்ஸ் புளட்னர், ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான துணைச் செயலரும் தூதுவருமான சிறில் நண்ஸ் ஆகியோர் யாழ்.அரச அதிபரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

முதல் நாள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையிலான குழுவினரை சந்தித்து கலந்துரையாடியதோடு யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினையும் சந்தித்து கலந்துரையாடினர்.

கடந்த 17 ஆம் திகதி யாழ். அரச அதிபர், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா உள்ளிட்டோரைச் சந்தித்தார்.

இதேவேளை, சர்வதேச தொழிலாளர் ஒருமைப்பாட்டுக்கான அமெரிக்க நிலையத்தின் பிரதிநிதி திமொதி, ஜெ.ரயான் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்து இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடன் சந்தித்து கலந்துரையாடினார்.

இவ்வாறு வெளிநாட்டு இராஜதந்திரிகளின் வருகை யாழ்ப்பாணத்தில் இந்த வருட முற்பகுதியில் அதிகரித்து காணப்படுகின்றது. அரச அதிகாரிகளுடனும் அரசியல் பிரமுகர்களுடனும் புத்திஜீவிகளுடனும் மதத்தலைவர்களுடனும் பொதுமக்களுடனும் சந்திப்பை ஏற்படுத்தி தமிழ் மக்களின் நிலைமையை அறிந்து கொள்ளும் பொருட்டு உத்தியோகபூர்வமாக இங்கு வரும் இராஜதந்திரிகளின் வருகை எவ்வாறு அதிகரித்துள்ளதோ அதே போன்று சுற்றுலாப் பயணிகளாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இவர்களில் பலர் வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளில் புகைப்படக்கருவியுடன் கலை, கலாசார நிகழ்வுகளையும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்விடங்களையும் பார்வையிடுகின்றனர்.

அரசியல் ரீதியில் தமிழ் மக்களுக்கு பயனளிக்க, தீர்வுத்திட்டத்தை இலங்கை அரசாங்கம் முன்வைக்க வெளிநாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும். சமாதானம் ஏற்பட்டதாக அனைத்து மக்களும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றால் நிரந்தரமானதும் நீதியானதுமான அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு விட்டதாக கூறப்படும் நிலையில் இராணுவ பிரசன்னம் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் அதிகமாக காணப்படுவது ஏன்? இராணுவப் பிரசன்னம் தமிழர் பகுதிகளில் குறைக்கப்பட வேண்டும் அல்லது முற்றாக அகற்றப்பட வேண்டும்.

இவ்வாறு தம்மை சந்திக்கும் வெளி நாட்டவர்களிடம் இங்குள்ளவர்களினால் பலமுறை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்திற்கு இந்த விடயங்கள் தொடர்பாக அழுத்தம் கொடுப்பதாக வாக்குறுதியளித்து விட்டு செல்வார்கள். சில இராஜதந்திரிகள் பலர் மௌனமாக இருந்து கூறுவதைக் கேட்டு விட்டுச் செல்வார்கள்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இராஜதந்திரிகளின் வருகையும் குறையவில்லை, கோரிக்கைகளும் குறையவில்லை. (ந- 6)

# என்னை பதவியிலிருந்து நீக்க வெளிநாட்டு சக்திகள் முயற்சி

## ஜனாதிபதி கவலை

(கொழும்பு)

சில வெளிநாட்டு சக்திகள் தம்மை பதவியில் இருந்து அகற்ற சதித்திட்டம் தீட்டினாலும் பொறுப்புகளை நிறைவேற்றிய பின்னர் மாத்திரமே தான் பதவியை விட்டு விலகுவேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் பல அபிவிருத்தி திட்டங்களை மக்களின் பாவனைக்காக திறந்து வைத்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விலையேற்றம் குறித்து குழப்பமடைய தேவையில்லை என தெரிவித்துள்ள ஜனாதிபதி சர்வதேச சந்தை நிலைமையின் அடிப்படையில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அதேவேளை, எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டாலும் நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டியவர்களுக்கு அதற்கான மானியங்கள் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# முன்னாள் போராளிகள் 950 பேரே புனர்வாழ்வு முகாம்களில் உள்ளனராம்

## புனர்வாழ்வு திணைக்களம் கூறுகிறது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் 950 முன்னாள் உறுப்பினர்கள் புனர்வாழ்வு முகாம்களில் இருப்பதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயக திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீதிமன்ற உத்தரவுக்கமைய அவர்கள் புனர்வாழ்வளிக்கப்படுவர்கள் என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுரு தெரிவித்தார். இவர்களுள் 67 பெண்களும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா, பூந்தோட்டம், மருதமடு, வெலிகந்த சேனபுர ஆகிய புனர்வாழ்வு நிலையங்களில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ-2)

# மண்ணெண்ணெய் நிவாரணத்திற்கு 80 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

330 பிரதேச செயலகங்களை அடிப்படையாக கொண்டு மண்ணெண்ணெய் நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் நேற்று முதல் ஆரம்பமாகியது. அரசாங்கம் இதற்கென மாதம் ஒன்றுக்கு சுமார் 80 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கி செய்கிறது.

இதனடிப்படையில் மின்சாரம் இல்லாத அனைத்து குடும்பங்களுக்கும் மாதம் ஒன்றுக்கு 200 ரூபா பெறுமதியான மண்ணெண்ணெய் கிடைக்கப்பெறும். இதனடிப்படையில் சுமார் 5 இலட்சம் குடும்பங்களுக்கு இந்த நிவாரணங்கள் கிடைக்கப்பெறவுள்ளது. மின்சாரம் இல்லாத சகல குடும்பங்களுக்குமான இந்த நிவாரண திட்டம் சமுர்த்தி ஆணையகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. (அ-2)

# இரத்தினக்கற்கள் கண்டெடுக்கப்பட்ட பகுதியிலிருந்து விலகியிருங்கள்

## பொலிஸார் உத்தரவு பிறப்பிப்பு

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் இரத்தினக் கற்கள் கண்டெடுக்கப்பட்ட பகுதியிலிருந்து விலகியிருக்குமாறு பொலிஸார் நேற்று முன்தினம் உத்தரவிட்டனர்.

அப்பகுதியில் இரத்தினக்கற்கள் தேடுவதற்காக மக்கள் திரண்டதையடுத்து கதிர்காமம் லுனுகம்வெஹர வீதியை நாளை மறுதினம் வரை மூட வைக்குமாறும் அப்பகுதிக்குள் வாகனங்களையோ நபர்களையோ செல்ல அனுமதிக்க வேண்டாம் எனவும் அப்பகுதி குடியிருப்பாளர்களை மாத்திரம் அனுமதிக்குமாறும் மாவட்ட நீதிபதி சஞ்சீவ ரம்யகுமார உத்தரவிட்டதையடுத்து அப்பகுதியில் நிலவுகிறது.

இரத்தினக்கற்கள் கண்டெடுக்கப்பட்ட பகுதியிலிருந்து ஒரு கிலோமீற்றர் சுற்று வட்டத்திற்குள் அனைத்து நிர்மாண மற்றும் அகழ்வுப் பணிகளையும் இடைநிறுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

வீதி நிர்மாணப் பணிக்காக தோண்டப்பட்ட மண்ணிலிருந்து நிர்மாணத்தொழிலாளியொருவர் இரத்தினக்கற்கள் கண்டுபிடித்தார். அதையடுத்து பெரும் எண்ணிக்கையான மக்கள் அங்கு குவியத் தொடங்கினர்.

வீதி நிர்மாணத்திற்காக கொண்டு வரப்பட்ட மண்ணை இரத்தினக்கற்கள் தேடுவதற்காக மக்கள் அகற்றத் தொடங்கிய நிலையில் நீதிமன்ற உத்தரவை அமுல்படுத்த வேண்டியேற்பட்டதாக கதிர்காம பொலிஸ் பொறுப்பதிகாரி ஐ.எச்.ரீ.பண்டார தெரிவித்தார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினர் அப்பகுதி காணிகளை மதிப்பீடு செய்யும் வரை மாற்று வீதிகளை பயன்படுத்துமாறும் பொதுமக்களை கதிர்காம பொலிஸ் பொறுப்பதிகாரி கோரியுள்ளார். (அ-2)

# கட்டுநாயக்கவில் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது

## ஒரு கிலோவிற்கு மேற்பட்டது என மதிப்பீடு

(கொழும்பு)

நாட்டிற்கு சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 70 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.


இந்த சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. சுமார் ஒரு கிலோகிராமிற்கும் அதிகமாக தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தங்கம் இந்தியப் பிரஜை ஒருவரினால் சிங்கப்பூரிலிருந்து கொண்டு வரப்பட்டு விமானத்தில் வேறொரு நபருக்கு கைமாற்றப்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரிடம் சுங்க திணைக்கள அதிகாரிகளே விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# மாசி மாத இராசி பலன்கள்

# 13.02.2012-13.03.2012




**சித்திரை 3, 4 பாதங்கள், சுவாதி, விசாகம்,1, 2, 3 பாதங்கள்**

**ஆரோக்கியத்தில் அக்கறை காட்டவேண்டிய நேரம்!**

**எதிர்காலத்தைப்பற்றியே எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டிருக்கும் துலாம் இராசி நேயர்களே!**

சொந்தக்காரர்களுக்கு மத்தியில் சுகமாக வாழ்ந்து காட்டவேண்டும் என்று விரும்புபவர்கள் நீங்கள்.

உங்களுக்கு இந்த மாசி மாத இராசி கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது மூன்று கிரகங்களின் வக்ர இயக்கமும் முற்றுகையிடும் மாதமாக அமைவதால் எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வதே நல்லது. ஆரோக்கியத்திலும் அடிக்கடி தொல்லைகள் உருவாகும் விதத்தில் ஜென்மச்சனியின் ஆதிக்கம் இருக்கிறது.

குடும்ப ஸ்தானாதிபதி செவ்வாய் வக்ரம் பெறுவது அவ்வளவு நல்ல தல்ல. எனவே, பலகாரியங்கள் தாமதமாகிக் கொண்டே வரலாம். வாழ்க்கைத்துணை வழியிலும், மனக்கசப்புத்தரும் செய்திகள் வந்து சேரலாம். பொதுவாக குடும்பத்தினர்களை கலந்தாலோசித்து எதையும் முடிவெடுப்பதே நல்லது. இடமாற்றம், ஊர்மாற்றங்களைத் தவிர்ப்பது நன்மை தரும்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளால் பிரச்சினைகளை சந்திக்க நேரிடலாம்.

எனவே, உடன் பணிபுரிபவர்களை அனுசரிப்பதோடு வேலையிலும் கூடுதல் கவனம் செலுத்தி பார்ப்பது நல்லது. புதன் வக்ரம் பெற்று உச்சம் பெறப்போகிறார். 9, 12 க்கு அதிபதியாக விளங்கும் புதன் வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது சுபகாரியங்களில் தடைகள் உருவாகலாம்.

நம்பிக்கையோடு செயற்பட்டவர்கள் விலக நேரிடலாம். ஆகவே, முறையாக சனிபகவானை வழிபாடு செய்வது நல்லது. காகத்திற்கு அன்னமிடுவதும் உகந்தது.

பெப்ரவரி 28 ஆம் திகதி மீன இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். அது புதனுக்கு உச்சவீடாகும். எனவே, முன்னோர்வழிச் சொத்துக்களில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பஞ்சாயத்துக்களில் தாமதம் ஏற்படலாம்.

மாமன், மைத்துனர்களுக்காக சில விரயங்களைச் செய்ய நேரிடலாம். வியாபார நலன் கருதி புதிய கூட்டாளிகளைச் சேர்க்க முன்வருவீர்கள், ஆனால் அவர்கள் நம்பிக்கைக்கு உரியவர்கள்தானா? என்பதை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது.

மார்ச் 11 ஆம் திகதி புதன் கும்ப இராசியில் வக்கிரம் பெறப்போகிறார். இதன் விளைவாக திடீர் விரயங்கள் உருவாகலாம். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவது நல்லது. மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புக்கள் மீண்டும் உங்களிடமே வந்துசேரலாம்.

மார்ச் முதல் திகதி மேசத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். எதிரிகள் ஸ்தானாதிபதி குருவுடன் இணைந்து சுக்கிரன் உங்கள் இராசியை பார்ப்பதால் மறைமுக எதிர்ப்புகள் மேலோங்கியிருக்கும். ஆதாயமில்லாத அலைச்சல் அதிகரிக்கும். உடன்பிறப்புக்களை அனுசரித்துச் செல்லவேண்டிய நேரமிது. குடும்பத்தில் பெண் வழிப் பிரச்சினைகள் வந்து கொண்டே இருக்கலாம்.

இம்மாதம் பெண் தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டினால் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும்.

இம் மாதம் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். சனியின் வக்ர இயக்கம் முடியும் வரை பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. காரியங்கள் காலதாமதப்படுகிறதே என்று கவலைப்பட வேண்டியதில்லை. செவ்வாயும் வக்ர இயக்கத்தில் இருப்பதால் உடன் பிறப்புக்களையும் அனுசரித்துச் செல்லுங்கள். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலமே குடும்பத்தில் அமைதியை வரவழைத்துக்கொள்ளலாம். அங்காரக வழிபாடு அல்லல் தீர்க்கும்.

## சிவல்புரி சிங்காரம்




**விசாகம் 4 ஆம் பாதம், அனுசம், கேட்டை**

**வியக்கும் செய்திகள் வீடு வந்துசேரும்!**
**நல்லது நடக்க நல்லதைச் செய்வோம்**
**என்று சொல்லும் விருச்சிக இராசி நேயர்களே!**

புகழ் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுபவர்கள் நீங்கள். பொல்லாதவர்களுக்கு மத்தியில் நல்லவர்கள் என்று பெயர் எடுத்துகொள்ள முயற்சி செய்பவர்கள் நீங்கள். உங்கள் யோசனைகள் மற்றவர்களை வெற்றிபெற வைக்கிறது. மக்கள்பலம் உங்களிடம் இருப்பதால் மகத்தான பொறுப்புக்கள் உங்களுக்குத் தானாகவே வந்து சேரும்.

உங்களுக்கு இந்த மாசிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது புதன் ஆதித்திய யோகமும், சனிச்சந்திர யோகமும், குருச்சந்திர யோகமும் கூடி செயற்பட்டு மாதம் தொடங்குவதால் நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடக்க வழிபிறக்கும். ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றாலும், சனியின் மீது குருவின் பார்வை பதிவதால் வாய்ப்புக்கள் வாயில் கதவைத் தட்டும். வருமானங்கள் கூடுதலாக வந்து சேரும்.

அதே நேரத்தில் விரயங்களும் நல்ல விரயங்களாக இருக்கும். கோவில் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். இராசிநாதனாகவும் ஆறுக்கு அதிபதியாகவும் விளங்கும் செவ்வாய் வக்ரம் பெறுவதால் பூமி யோகம் கிட்டும். என்றைக்கோ வாங்கிய பூமி பலமடங்கு விலை உயரந்து பணக்குவியலை உங்கள் வீட்டிற்கு கொண்டுவந்து சேர்க்கப் போகிறது. நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து நல்ல வாய்ப்புக்களை வரவழைத்துக் கொடுப்பர்.

புதன் இம்மாதத்தில்தான் வக்ரமும் பெற்று உச்சம் பெறுகிறார். அஷ்டமாதிபதி உச்சம் பெறுவதால் சென்ற மாதத்தைக் காட்டிலும் இம்மாதம் செல்வநிலை உயரும். ஜென்ம இராகு சப்தம கேதுவுக்கு பரிகாரமாக, சர்ப்பசாந்தியை முறையாகச்செய்து கொள்வது நல்லது. கேதுவுக்கு பரிகாரமாக வடக்கு பார்த்த கற்பக விநாயகரை வழிபட்டு வருவது நல்லது. சனிகவசம் பாடி சனீஸ்வரரையும் அனுமன் கவசம் பாடி ஆஞ்சநேயரையும் வழிபட்டு வாருங்கள். பணிகளில் முன்னேற்றமும் பணவரவும் திருப்தி தரும்.

பெப்ரவரி 28 ஆம் திகதி மீன இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். புதன் உச்சம் பெறும் இந்த நேரத்தில் பயணங்கள் அதிகரிக்கும். புதிய மனிதர்களின் சந்திப்புப் பொருளாதார நிலையை உயர்த்தும். மார்ச் 11 ஆம் திகதி கும்பத்தில் புதன் வக்ரம் பெறப்போவதால் புதன் ஆதித்தியயோக அடிப்படையில் அரசுவழிச் சலுகைகள் கிடைக்கும். அரசியல் வாதிகளால் நன்மை ஏற்படும். கல்விக்காக எடுத்த முயற்சிகள் கைகூடும். பாகப் பிரிவினைகள் சுமூகமாக முடியும்.

பன்னிரண்டுக்கு அதிபதியான சுக்கிரன் ஆறாமிடத்தில் சஞ்சரிக்கும் பொழுது விபரீத இராஜயோகம் செயற்படப்போகிறது. எனவே, பணம் பலவழிகளிலும் வந்து பையை நிரப்பும்.

மார்ச் 1 ஆம் திகதி முதல் மகிழ்ச்சி அதிகரிக்கும். கல்யாண, காதுகுத்து, மணிவிழா என்று சுபகாரியங்களில் கலந்துகொள்வதோடு சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள்.

இம்மாதம் பௌர்ணமி நிலவொளியில் மலைவலம் வருவதன் மூலமும் மலைமேல் வீற்றிருக்கும் முருகப்பெருமானை வழிபட்டு வருவதன் மூலமும் முன்னேற்றங்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

இம்மாதம் தொட்டகாரியங்களில் வெற்றி கிடைக்கும் மாதமாக உங்களுக்கு அமையப் போகிறது. பணத் தொகை வந்து கொண்டே இருக்கும். இருப்பினும் குடும்பச்செலவு கூடலாம். உடன்பிறப்புக்களை அனு சரித்துச் சொல்வது நல்லது. கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தாய்வழி சொத்துக்களால் தனலாபம் உண்டு. அரசு அனு கூலமும் மேல்அதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும் நேரமிது. இராகு, கேது வழிபாடு நன்மையை வழங்கும்.

(தொடரும்)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையில் தெரிவானோர் விபரம்

நேற்றைய தொடர்ச்சி...

தொண்டைமானாறு வெளிக்களநிலையத்தினால் க.பொ.த. உயர்தர மாணவர்களிடையே கணித, விஞ்ஞான, வர்த்தகப் பாடப் பரீட்சைகள் நடத்தப்பட்டன. இப்பிரிவுகளில் புள்ளி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்களை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா அறிவித்துள்ளார்.

இதில் ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

**உயிரியல்**
**தரம் 12 (2013)**

ரி.அபிநயா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஆர்.கார்த்திகா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), வை.சாம்பவி (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), கே.கிரிதரன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), ரி.ஆதவன் (யா/இந்துக் கல்லூரி), எ.ஆன் அபிநயா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), ரி.நினுஜா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை),எஸ். தினேஷ் (யா/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), வி.சந்தனா (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), வை.சாருஜன் (யா/ இந்துக் கல்லூரி), ஆர்.பிரணவன் (ஆங்கில மொழிமூலம்) (யா/ இந்துக் கல்லூரி), எஸ்.வெண்ணிலனன் (யா/இந்துக் கல்லூரி), எஸ்.சமிதஜா (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.நிதுர்சன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), ஆர்.சிவாஜினி (யா/இந்து மகளிர் கல்லூரி), எஸ்.சோபிதா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எ.ஆன் விசாலா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.திவாகர் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), எஸ்.அச்சுதனி (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.சாகித்தியா (யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்),ஜே. சஞ்சிகா (யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), எஸ்.நர்த்தனா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஆர்.சரவணன்(ஆங்கிலமொழிமூலம்) (யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.கௌரிசங்கர் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), எஸ்.அருள்பவன் (யா/ இந்துக் கல்லூரி), எஸ்.யாழினி (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எம்.தனுஜா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஜி.கஜகரனி (யா/இந்து மகளிர் கல்லூரி), எஸ்.பிரியந்தினி (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), கே.சாயா (யா/இந்து மகளிர் கல்லூரி)

**வர்த்தகம்**
**தரம் 12 (2013)**

பி.பானுஜா (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எ.ஜெயஈஸ்வரன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), எஸ்.குகரூபன் (யா/ இந்துக் கல்லூரி), ஜெ.நிதுசா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எம்.பிரியங்கா (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.மாதுரி (யா/இந்து மகளிர் கல்லூரி), பி.கஜானி (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.சங்கீதா (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.நவீனா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), பி.கீர்த்தனா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), ரி.நிரோஜன் (யா/ பருத்தித்துறை ஹாட் லிக் கல்லூரி), எ.தேவகமல் (யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), எம்.வைஷ்ணவி (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), கே.சுபாங்கன் (யா/ இந்துக் கல்லூரி), எஸ்.கபிலன் (யா/ இந்துக் கல்லூரி), பி.நிசாந்தினி (யா/ இந்து மகளிர் கல்லூரி), ஈ.றமணன் (யா/ இந்துக் கல்லூரி), கே.மதுரா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எம்.கஜலக்ஷி (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), ரி.அனோஜிதன் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.யசோகுலன் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), எம்.விந்தாரகன் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), எம்.ரமணன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), ஜே. ஐஸ்வர்யா (யா/ கொக்குவில் இந் துக் கல் லூரி), ஜி.துசியங்கா (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆர்.தனுசியா (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.திவ்யா (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜி.பிரசாந்தன் (யா/ இந்துக் கல்லூரி), ஜி.சுகனியா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), ரி.கஜந்தா (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி). (முற்றும்)

# தமிழ் மக்களின் அபிவிருத்தி குறித்தே கூட்டமைப்பினர் சிந்திக்க வேண்டும்

## பிரதியமைச்சர் முரளிதரன் கூறுகின்றார்

தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிமைகளை கதைத்துக் கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றாமல் தமிழ் மக்களின் அபிவிருத்திகள் தொடர்பில் சிந்தித்து செயற்பட வேண்டும் என மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு போரதீவுப்பற்று கல்விக் கோட்டத்துக்குட்பட்ட ஆனைகட்டியவெளி, நாமகல் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாழ்வாதார முறைகளில் இந்தப் பிரதேசம் ஒரு பின்தங்கிய பிரதேசமாக இருக்கின்றது. அதை மேலோங்கச் செய்வதற்கு கடின உழைப்புகளை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டம் பாரிய அபிவிருத்தியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. இங்கு பிரதான வீதிகள், பாதை அபிவிருத்தித் திட்டங்கள், நீர் வழங்கல்கள், விவசாயம் போன்ற பல அபிவிருத்திகள் நடந்து வருகின்றன.

30 வருட யுத்தத்தினால் ஏற்பட்ட மனச் சோர்வுகள் மாற்றமடைந்து அவர்களின் ஆளுமைகள் விருத்தியடைந்துள்ளன. 30 வருட இடைவெளியென்பது ஒரு சாதனை இடைவெளியல்ல. 30 வருட இடைவெளியை 3 வாரம், 3 மாதம், 3 வருடங்களில் தீர்க்கலாம் என்பது முடியாத விடயமாகும். குறைந்தது 10 வருடங்களாவது தேவைப்படும்.

தற்போது வளத்தை கொண்டுவர வேண்டிய தேவை இருக்கின்றது. வளமுள்ள இடத்தில் இருந்தால் மாத்திரம் தான் அதை கொண்டு வரலாம். அதற்காகவே நாங்கள் அரசாங்கத்தில் இருந்து கொண்டு அபிவிருத்திக்கான நிதிகளை கொண்டு வந்திருக்கின்றோம்.

கல்வியை வளர்க்க வேண்டும் என்பதற்காக நாம் கடின முயற்சிகளை செய்து வருகின்றோம். தற்போது நிலவுகின்ற சிறந்த அமைதிச் சூழலை பயன்படுத்தி மாணவர்களாகிய நீங்கள் உயர வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும். அதற்காக நீங்கள் முதலில் ஆசிரியர்களை மதிக்க வேண்டும். அவர்களை நீங்கள் மறக்காது நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

கல்வியே நிரந்தர செல்வம் என்பதை உணர்ந்து நீங்கள் அதில் கூடிய கவனம் எடுக்க வேண்டும். பெற்றோர்களும் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்தார். (அ-2)

# கரும்புள்ளியை அகற்றிய மகான்

## சிங்கப்பூர் தேரர் புகழாரம்

(கொழும்பு)

மூன்று தசாப்தகாலமாக நாட்டின் மீதிருந்த கரும்புள்ளியை அகற்றுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

அதனால் தான் இலங்கையர்கள் இன்று அபிமானத்துடன் இருக்கின்றனர் என்று சிங்கப்பூர் சங்கநாயக்க தேரர் பேராசிரியர் பெல்லங்வில தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூருக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிங்கப்பூரில் தர்ம நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இலங்கை தேரர்களை சந்தித்துள்ளார்.

இதன்போதே சங்கநாயக்க தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# நாட்டில் தற்போது கண்பார்வை இழந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் உள்ளனர்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

எதிர்காலத்தில் விழிவெண்படலங்களை தானம் செய்ய விரும்புவோர் இணையத்தளத்தின் ஊடாக தம்மை பதிவு செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு தேசிய கண் வங்கி ஸ்தாபிக்கப்பட்ட ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு அதன் உத்தியோகபூர்வ இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதன் மூலம் விழிவெண்படலங்களை தானமாக வழங்க விரும்புவோர் தம்மை பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் தற்போது வெற்றிகரமாக இயங்கி வரும் கண் வங்கிகளுக்குள் இலங்கையின் தேசிய கண் வங்கியும் இணைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த ஒரு வருட காலத்தில் தேசிய கண் வங்கியில் துரித முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித மஹிபால கூறியுள்ளார்.

இதேவேளை கண் வங்கி ஆரம்பிக்கப்பட்டு ஒருவருட காலத்தில் 450 விழிவெண்படலங்கள் கண்பார்வை குறைந்தவர்களுக்கு பொருத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது கண்பார்வை இழந்த சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் வாழ்ந்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதில் 20 வீதமானவர்களின் விழிவெண்படலம் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (அ-2)

# வர்த்தக கப்பல்களை பாதுகாக்கும் பணியில் ரக்னா நிறுவனம் ஈடுபடுகிறது

(கொழும்பு)

வெளிநாட்டு வர்த்தக கப்பல்களை பாதுகாக்கும் கடமைகளில் ரக்னா லங்கா நிறுவனம் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்து சமுத்திரம் மற்றும் அரேபிய கடற்பகுதிகளில் பயணம் செய்யும் வெளிநாட்டு வர்த்தகக் கப்பல்களை பாதுகாக்கும் முக்கிய பொறுப்பு இந்த பாதுகாப்பு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சோமாலிய கடற்கொள்ளையர்களிடமிருந்து கப்பல்களை பாதுகாப்பதற்காக ஆயுதங்களுடன் குறித்த பாதுகாப்பு நிறுவனத்தை சேர்ந்த உத்தியோகத்தர்கள் கப்பல்களில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

கடற்பாதுகாப்பு பணிகளுக்காக சுமார் 200 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் கே.பி. எகொடவெல தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கப்பலிலும் இரண்டு முதல் மூன்று உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது. முன்னாள் படையதிகாரிகளே இந்த தனியார் பாதுகாப்பு நிறுவனத்தில் கடமையாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ரக்னா லங்கா என்ற பாதுகாப்பு நிறுவனம் அரசாங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவருக்கு சொந்தம் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்



சோவியத்தின் மார்டர் படையணி மாஸ்கோவைப் பாதுகாப்பதற்கான கடுமையான பயிர்ச்சியின் போது-1941

## ஒரு மீள்பார்வை 46




ஜோசெப் ஸ்ராலின், சோவியத்யூனியனின் தலைவர் (19,யூலை,1941-1953மார்ச்,5) உயர்இராணுவக் கட்டளைத் தளபதி (1943-1953)

நவம்பர் 7ஆம்திகதி செஞ்சதுக்கத் தில் நடைபெற்ற வழக்கமான சோவியத் இராணுவ அணிவகுப்பு பெரும் அரசியல் முக்கியத் துவம் உடைய தாய் அமைந்தது. உலகெங் கும் உள்ள உழைப்பாளிகள் இதை, தமது தலைநகரைப் பாதுகாத்து நிற்க சோவியத் மக்கள் கொண்டுள்ள அசைக்கமுடியா உறுதி யின் வெளிப்படாக, சோவியத்மக்களின் பலம் மற் றும் வெற்றியில் இவர்களுக்குள்ள நம் பிக்கையின் வெளிப்படாக ஏற்றனர்.

நவம்பர் நடுவில் திஹ்வின் மற்றும் ரஸ் தோவ் அருகே சோவியத் துருப்புகள் எதிர்த் தாக்குதலைத் தொடுத்தன. இங்கே இயங்கி வந்த எதிரியின் முக்கிய தாக்குதல் படைத் திரட்டுகளை ஒழித்துக் கட்டி இவற்றைக் கொண்டு சென்டர் படைத்தொகுதியை பலப்படுத்தும் வாய்ப்புகளை அகற்றுவது தான் இதன் நோக்கமாகும்.

நவம்பர் 15-16 இல் பாசிச இராணுவம் மாஸ்கோவின் மீது இரண்டாவது தாக்கு தலை-இம் முறை இதுவே கடைசியுமாகும்-தொடுத்தது. 3 டாங்கி டிவிசன்கள், 7 மோட் டார் டிவிசன்கள் உட்பட 51 டிவிசன்களை உள்ளடக்கிய சென்டர்படைத் தொகுதியின் துருப்புகள் பலம்மிக்க இரண்டு படைத்திரட்டு களின் மூலம் மாஸ்கோவை சுற்றிவந்து-வடக்கே வலகலாம்ஸ்கியிலிருந்து யாஹ் ரமா, நகீன்ஸ்க் நோக்கியும் 93-வது, 4-வது டாங்கிப் பிரிவுகள் தெற்கே தூலாப் பிரதேசத் திலிருந்து கஷீரா, நகீன்ஸ்க் நோக்கியும் சோவியத் தலைநகரைச் சுற்றிவளைத்து அதேநேரத்தில் போர்முனையிலிருந்து முன் நோக்கித் தாக்கி கைப்பற்ற முயன்றன. போர் முனையிலிருந்து முன்னால், 4- வது போர்க் களப்படை தாக்கியது. வடக்கே 9-வது படைக் கும் தெற்கே 2-வது படைக்கும் சென்டர் படைத் தொகுதியின் முக்கிய தாக்குதல் படைத் திரட்டுகளை உருவாக்கும் கட்டளை இடப்பட்டது.

உயர்மட்ட பிரதான படைத் தலைமைய கம் எதிரியின் திட்டங்களையும் எதிரித்துருப் புகள் திரட்டப்படும் போக்கையும் உரிய நேரத் தில் கண்டுபிடித்து மேற்கு சேனைக்கு கூடு



மொஸ்கோ வாசிகள் இரவுபகல் பாராது ஆயுதங்களையும் இராணுவத் தளவாடங்களையும் உற்பத்தி செய்கின்றனர் நவம்பர்,1941

தல் ஆட்கள், டாங்கிகள், பீரங்கிகள் மற்றும் விமானங்களை அளித்து பலப்படுத்தவும் தற்காப்பை, குறிப்பாக டாங்கி எதிர்ப்புப்பாது காப்பை மேம்படுத்தவும் மாஸ்கோ பிரதேசத்தில் சேமப்படைகளை ஒரு முனைப்படுத்தவும் உடன டியாக நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் பயனாய் தற்காப்பு மேலும் உறுதியான தாயும் நிலையானதாயும் மாறியது. என் றாலும் எதிரி இன்னமும் ஆட்களின் எண்ணிக்கை யிலும் சாதனங்களிலும் பொதுவாக விஞ்சிநின் றான். ஆட்களைப்பொறுத்தமட்டில் இது இரண்டு மடங்காயும் டாங்கிகளில் 1.5 மடங்காயும்



சோவியத்தின் செஞ்சதுக்கத்தில் சோவியத் இராணுவம் மொஸ்கோவைக் காப்பதற்கு உறுதிபூண்டு அணிவகுத்தபோது-07,நவம்பர்-1941 (ஓவியம்-கொன்ஸ்ரான்ரின் ஜுவான்)

## ‘ஜேர்மனி, ஜப்பான் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு மின்னல் வேக யுத்தம்’ என்ற ஹிட்லர் போர்த்தந்திரத்தின் தோல்வி

பீரங்கிகளில் 2.5 மடங்காயும் இருந்தது. விமா னங்களைப் பொறுத்தவரை சோவியத்தரப்பு 1.5 மடங்கு விஞ்சிநின்றது.

பாசிஸ்டுகள்சோவியத்தலைநகரின்நிலையை மோசமாகக் கருதி வெற்றியில் உறுதியோடு இரு ந்தனர். கிளீன் சோல்னெச்ன கோர்ஸ்க் மற் றும் ஸ்தாலின கோர்ஸ்க்-கஷீரா திசைகளில்கடும் சண்டைகளுக் குப்பின் பேரிழ ப்பை விலையா கத் தந்துதான் எதிரியால் நக ரின்வடக்கேயும்-மாஸ்கோ-வோ ல்கா கால்வா யும்கிருக்கவோ விற்கும்- தெற் கேயிருந்து கஷீருக்கும் வரமுடிந்தது. ஆனா லும் எதிரியால் சோவியத் போர்முனையில் பிளவை ஏற்படுத்த முடியவில்லை. மேற்கு, கலீனின் சேனைகள், தென்மேற்கு சேனை யின் வலப்புற மற்றும் மாஸ்கோ தற்காப்பு மண்டலம் ஆகியவற்றின் துருப்புகள் எதிர்த் தாக்குதல்களையும் பதிலடிகளையும் மேற் கோண்டு எதிரியின் பலமிக்க டாங்கி தாக்கு தலை எதிர்த்து நின்றன. இதில் ஜெனரல் ரக்க சோவ்ஸ்கியின் தலைமையிலிருந்த 16-வது படை ஜெனரல் பன்ஃபீலவின் 316-வது டிவி சன், ஜெனரல் தவதோரின் குதிரைப்படை யினர், கர்னல்கதுக்கோவின் முதல் கார்டு டாங்கி பிரிகேடு மற்ற படைப்பிரிவுகள் ஆகியன சிறப்பாக போரிட்டன. வியத்தகு தைரியத்தை யும் மிகப்பெரும் வீரத்தையும் வெளிப்படுத்திய சோவியத் போர்வீரர்கள் இறக்கும்வரை தலை நகரின் சுவரருகே பாதுகாத்து நின்றனர். இந் நாட்களில்தான் கம்பெனியின் அரசியல் போத கராகிய கிலச்கோவின் தலைமையில் பன் ஃபீலவ் வீரர்கள் அற்புதமானதொரு வீரச் செயலை ஆற்றினர். ருஷ்யா மகத்தானது, ஆனால், பின்வாங்க இடமில்லை. பின்னா லிருப்பது மாஸ்கோ வென்று கிலச்கோவ் கூறியபோது இதில் மாஸ்கோவைப் பாது காத்து நின்ற அனைவரின் உணர்ச்சிகளும் சிந்தனைகளும் பிரதிபலித்தன. 28 போர் வீரர்கள் 50 எதிர் டாங்கிகளைக் கண்டும் பின் வாங்காது 18 பாங்கிகளை அழி த்து உறுதியாகப் பாது காத்துநின் றனர். சோவியத் படை வீரர்களின் உறுதி எதிரியை அதிசயிக்கவைத்து கலங்கச்செய்தது.



மொஸ்கோவைப் பாதுகாப்பதற்கான கடுமையான பயிற்சியில் வொறோஷில்லோவ் றெஜிமென்ட்- ஆகஸ்ட் 30- 1941

டிசம்பர் ஆரம் பத்தில்எதிரி, நரோ-ஃபமீன்ஸ்க் பிர தேசத்திலிருந்தும் தூலா அருகேயி ருந்தும் மாஸ்கோ வைத் தாக்க கடைசி முயற்சியைச் செய்தான். ஆனால், சோவியத் துருப்புகளின் வீரஞ்செறிந்த முயற்சிகளால் எதிரியின் இம்முயற்சிகளும் குலைக்கப்பட்டன. பாசிஷ்டுகளுக்கு மிகப் பெரும் சேதங்கள் ஏற்பட்டன.

**வி.அ.மத்சுலேன்கோ**

டிசம்பர் 5 ஆம் திகதி வாக்கில் மாஸ்கோ மீதான ஜேர்மனியத் தாக்குதல் எல்லா இடங் களிலும் நிறுத்தப்பட்டது. எதிரியின் தாக்குதல் வாயப்புகள் மங்கிப்போயின.


நவம்பரில் தலைநகரில் உழைப்பாளி கள் போர்முனைக்கு மதிப்பிடமுடியா உத வியை அளித்தனர். மோசமான பருவநிலை களிலும் எதிரி விமானப்படை தாக்கியபோதி லும் மாஸ்கோவாசிகள் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் தன்னலங் கருதாது உழைத்து, ஆயுதங்களையும் இராணுவத் தளவாடங்களையும உற்பத்தி செய்தனர். நகருக்குவரும் நுழைவாயில்கள் அருகே யும் நகரத்திலும் தற்காப்பு அரண்களைக் கட்டினர். தற்காப்பு காலகட்டத்தில் மாஸ்கோ வாசிகள் மொத்தமாக 676 கி.மீ. டாங்கி எதிர்ப்பு அகழிகளையும் 445 கி.மீ. டாங்கி எதிர்ப்பு குழிகளையும் தோண்டினர். 1300 கி.மீ.க்கும் அதிகமான நீளத்திற்கு டாங்கி எதிர்ப்புத் தடைகளை உருவாக்கினர். 30 ஆயிரத்துக்கும் அதிகமான பீரங்கி மேடை களைக் கட்டினர். மாஸ்கோ அருகே 1528 கி.மீ. தூரத்துக்கு காட்டு தடையரண்கள் உரு வாக்கப்பட்டன. மாஸ்கோ பிராந்தியத்தில் எதிரியிருந்த பகுதிகளில் 41 கெரில்லாப் படை அணிகள் இயங்கின. இவை நிரந்தர இராணு வத்திற்கு பெரிதும் உதவின.

மாஸ்கோ அருகே நடைபெற்ற தற் காப்புப் போரில் சோவியத் இராணுவம் வெற்றிபெற்றது. மாஸ்கோ மீதான இரண் டாவது தாக்குதலின்போது மட்டும் எதிரி 1இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோ ரையும் சுமார் 800 டாங்கிகளையும் கிட்டத் தட்ட 300 பீரங்கிகளையும் 1500 விமானங் களையும் பறிகொடுத்தான். விமானப்படைத் தாக்குதல்களால் மாஸ்கோவை அழிக்க வேண்டுமென்ற திட்டத்தையும் பாசிஷ்டுக ளால் நிறைவேற்ற இயலவில்லை. வான் எதிர்ப்பு பாதுகாப்பை பலப்படுத்தியதானது. நல்ல பயன்களை அளித்தது.

(தொடரும்)

# அதிசய உலகம்...

## சீனாவைச் சேர்ந்த 11 வயது சிறுமிக்கு அவள் உடலில் பிறிதொரு உடல்



சீனாவைச் சேர்ந்த 11 வயது சிறுமிக்கு அவள் உடலில் இருந்து இன்னுமோர் உடல் வெளிவரத் தொடங்கியுள்ளது.

ஆரம்பத்தில் முதுகில் சிறு கட்டு போல தோன்றியதை பெற்றோர் பெரிது பண்ணாமல் விட்டுவிட்டனர். தற்பொழுது அக்கட்டிலே நெஞ்சுப்பகுதியும் கைகளும் வெளித்தோன்றத் தொடங்கியுள்ளன. மருத்துவமனையில் சேர்த்தபோது அவளைப் பரிசோதித்த மருத்துவர்கள் அடுத்து கால்கள் வெளித் தேன்றுவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாக தெரிவித்துள்ளனர். இம் மறு உடல் தோற்றத்தால் சிறுமியின் உடல் போசாக்கு வீணடிக்கப்படுவதால் அவள் உடல்நிலை மிக மோசமாக காணப்படுகிறது. மேலதிக உடலை அப்புறப்படுத்த மேற்கொள்ள வேண்டிய அறுவைச் சிகிச்சைக்கு பெருமளவில் பணச்செலவு ஏற்படுமென்பதால் பெற்றோர் செய்வதறியாது தடுமாறுகிறார்கள்.

## 9 வயதில் பட்டம்பெற்று சிறுவன் சாதனை




அமெரிக்காவைச் சேர்ந்த சிறுவன் மோஷே காய் கவலின் 9 வயதில் பட்டம் பெற்று சாதனை படைத்துள்ளார். இவர் தனது 8 வயதில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ளம் கம்யுனிட்டி கல்லூரியில் சேர்ந்தான். ஒரே ஆண்டில் பட்டப்படிப்பை முடித்து சாதனை படைத்துள்ளான்.

இது மட்டுமல்லாமல் இளம் வயதிலே விகேன்டு (We can Do) என்ற பெயரில் ஆங்கிலத்தில் ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளான். 100 பக்கங்கள் கொண்ட அதில் ஏனைய சிறுவர்களும் தன்னை போல் குறுகிய காலத்தில் சாதனை படைக்க என்ன செய்ய வேண்டும் என்று எழுதியுள்ளான். அறிவாற்றல் நிறைந்தவர்களை ஜூனியஸ் என சொல்வார்கள். இந்த சிறுவனையும் அப்படித்தான் எல்லோரும் சொன்னார்கள். ஆனால் அதை அவன் ஏற்க மறுக்கிறான்.

மேலும் அவன் புத்தகத்தில் கூறியுள்ளதாவது, ஜாக்கிசான் திரைப்படங்கள் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனாலும் ஒரு வாரத்துக்கு 4 மணி நேரம் மட்டுமே தொலைக்காட்சி பார்ப்பேன். ஏனைய நேரங்களில் படிப்பில் கவனம் செலுத்துவேன்.

தற்போது 14 வயதாகும் இந்த மாணவன் மேலும் ஒரு பட்டத்தையும் பெற்று சாதனை நிகழ்த்தியுள்ளான்.

## உலகின் மிக இளம் யோகா கலை பயிற்றுநராக 6 வயது சிறுமி




ஸ்ருதி பாண்டே எனும் ஆறு வயது சிறுமி உலகின் மிக இளமையான யோகா கலை பயிற்றுநராக விளங்குகின்றார். இவ்வளவு சிறிய வயதில் அவர் யோகா கலையை பயிற்றுவிப்பது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. உடலை வளைப்பதில் திறமைமிக்க ஸ்ருதிபாண்டே, வட இந்தியாவில் உள்ள ஆச்சிரமம் ஒன்றில் கடந்த இரண்டு வருடங்களாக தன்னை விட பெரியவர்கள் பலருக்கு யோகா கலையை பயிற்றுவித்து வருகிறார்.

அவருடைய பயிற்றுவிப்பாளரான ஹரி சேட்டன் (வயது 67) 35 வருடங்களுக்கு முன்பு இந்த ஆச்சிரமத்தை தோற்றுவித்தார்.

இந்த ஆச்சிரமத்தில் 4 வயதில் மாணவியாக வந்து சேர்ந்த ஸ்ருதியின் யோகா திறமையை ஹரி சேட்டன் கண்டு வியந்து கொண்டார். இதில் என்ன அதிசயம் என்றால் இச் சிறுமி பிறருக்கு பயிற்றுவிப்பாளராக இருப்பது தான்.

## 220 அடி உயரமான தேநீர் குவளை




சீனாவிலுள்ள தேநீர் பிரியர்கள் சிலர் இணைந்து உலகின் மிகப் பெரிய தேநீர்குவளையொன்றை உருவாக்கியுள்ளனர். பார்ப்பவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும் இக் குவளையின் உயரம் 220 அடியாகும். இக் குவளையில் 28 மில்லியன் லீற்றர் தேநீரை நிரப்ப முடியும்.

சீனாவின் தெற்மேற்கு பகுதியில் உள்ள மேய்டென் பகுதியில் இவ் மிகப் பெரிய குவளை உருவாக்கப்பட்டுள்ளது. தேநீர் பிரியர்கள் தேநீருக்கான தங்களது காணிக்கையாக இத் தேநீர் குவளையை தயாரித்துள்ளனர். அதனுடன் தேநீர் கோப்பையொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.


தற்போது அவர்கள் தங்களது தேநீர் குவளையை கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் பதிவதற்காக கின்னஸ் அலுவலர்களை தொடர்புகொண்டுள்ளனர்.

## 3.2 மில்லியன் புள்ளிகளில் தந்தையின் உருவப்படம்



தந்தையர்களின் அறிவுரைகளை செவிமடுக்கு நேரமில்லாத பிள்ளைகள் வாழுகின்ற இந்த கலியுகத்தில் மிகவும் பொறுமையுடன் தனது தந்தையின் படத்தை புள்ளிகளை வைத்து தத்ரூபமாக வரைந்துள்ளார் மியூஜ் வெல் என்டாரா என்ற புளோரிடாவைச் சேர்ந்த கலைஞர் ஒருவர் இதற்காக 11in × 17in அளவினையுடைய தாளைப் பயன்படுத்திய அவர் 3.2 மில்லியன் கணக்கான மிகவும் மெல்லிய புள்ளிகளையும் தன் கைகளாலேயே வைத்து வரைந்து முடித்திருக்கின்றார்.

## கொடூரமாக காட்சியளிக்கும் சிற்பங்கள்– பூசணிக்காயில்



அமெரிக்காவை சேர்ந்த Ray Vilyafane என்பவர் தன் கையில் கிடைப்பதை வைத்து தன் திறமையினை வித்தியாசமாக வெளிப்படுத்துகிறார். இவர் தர் பூசணிகளை வைத்து கொடூரமான முகங்களை அமைத்துள்ளார்.

(Halloween)பண்டிகைக்காலம் நெருங்கி வருவதால் இவ்வாறான சிற்பங்களின் தேவைகள் அதிகரித்துள்ளது. பயமுறுத்தும் ஆவிகள் மற்றும் கொடூரமான முகங்களை செதுக்கியுள்ளார்.



# சிறுவர் அரங்கம்

16

## அம்புலி மாமா கதைகள்

## பொற்காசுகளை திருடிய செல்வந்தர்!

உடனே கிழவியை நோக்கி "அம்மா உன் பை என்னிடமே இருக்கட்டும். நீ சொல்வது உண்மையானால் உன் பொற்காசுகள் உனக்குத் திரும்ப கிடைக்கும்" என்றார்.



"அந்தக் கடவுள் சத்தியமாக நான் சொன்னது உண்மை!" என்று ஆணித்தரமாக கிழவி கூற, "அம்மா! நாளை மறுநாள் வா! அதற்குள் உண்மை புலனாகும்" என்றார் அக்பர். கிழவியும் சலாம் செய்து விட்டு சென்றாள்.

அதன் பிறகு தர்பார் கலைந்தது. அனைவரும் எழுந்து செல்ல பீர்பால் பையைக் கையில் ஏந்திக்கொண்டு தீவிரமாக யோசித்தவாறே சென்றார். பீர்பால் மீது பொறாமை கொண்ட சிலர் இந்த வழக்கைத் தீர்க்க முடியாமல் பீர்பால் தோல்வியடைவார் என்றும் அதன் பிறகு அவர் தலைநிமிர்ந்து நடக்க முடியாதென்றும் பீர்பாலை கேலி செய்தவாறு சென்றனர்.

அவர்கள் தன்னை ஏளனம் செய்வதைப் பொருட்படுத்தாமல் பீர்பால் வீட்டுக்குச் சென்றார். கிழவி கூறியது உண்மை என்று அவருடைய உள்ளுணர்வு கூறினாலும் பையில் இருந்து குல்ஷா எப்படி பொற் காசுகளை திருடியிருக்க முடியும் என்பதை மட்டும் ஊகிக்கவே முடியவில்லை.

தன் மனைவி தன்னை புன்னகையுடன் வரவேற்பதைக் கூட அவர் கவனிக்கவில்லை. மௌனமாக சாப்பிட உட்கார்ந்தார். கைகள் உணவை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாலும் மனம் அந்த வழக்கைப்பற்றி யோசிப்பதிலேயே தீவிரமாக ஆழ்ந்தது.

திடீரென பீர்பாலுக்கு ஒரு யோசனை உதயமாயிற்று. உடனே தன் படுக்கை அறைக்கு சென்று அவர் விலையுயர்ந்த படுக்கை விரிப்பு ஒன்றை எடுத்து அதை கத்தரிக்கோலால் சரசரவென கிழித்தார். அதைப் பார்த்த அவர்மனைவி ஓடி வந்து "ஐயோ! உங்களுக்கு பைத்தியமா? என்ன காரியம் செய்கிறீர்கள்?" என்று கூச்சலிட்டாள்.

"உஷ்" என்று அவளை அடக்கி விட்டுத் தன் வேலையாளை அழைத்த பீர்பால் "இந்த படுக்கை விரிப்பு கிழிந்ததே தெரியாமல் அருமையாக தைக்க வேண்டும்" என்றார். அப்படிப்பட்ட திறமையான தையற்காரர் யாராவது தெரியுமா? என்று கேட்க அவன் "ஐயா! மன்சூர் அலி எனும் தையற்காரன் ஒரு மேதாவி! அவனிடம் கொடுத்தால் கிழிந்ததே தெரியாமல் தைத்து விடுவான்" என்றான்.

உடனே அவனிடம் பீர்பால் அதைக் கொடுத்தனுப்பினார். மறுநாள் மாலை வேலைக்காரன் கொடுத்த வேலையை கச்சிதமாக முடித்து விட்டுத் திரும்பினான். படுக்கை விரிப்பைப் புரட்டிப் பார்த்ததும் அது முன்பு கிழிந்திருந்த இடத்தை பீர்பாலினால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவ்வளவு நன்றாக மன்சூர் அலி தைத்திருந்தான்.

"ஆகா மிகப் பிரமாதமாகத் தைத்து இருக்கிறானே! இந்த மன்சூர் அலியை நேரில் சந்தித்துப் பாராட்ட விரும்புகிறேன்" என்று கூறிவிட்டு பீர்பால் தன் வேலைக்காரனுடன் மன்சூர் அலியின் கடைக்குச் சென்றார்.

"அடடா! பிரபு! நீங்களா! சொல்லியிருந்தால் நானே உங்களைத் தேடி வந்திருப்பேன்!" என்று மன்சூர் அலி ஓடி வந்தான்.

"மன்சூர்! உன் கடைக்கு வந்து உன்னை நேரில் பாராட்ட வேண்டும் என்று தோன்றியது. அதனால்தான் நானே இங்கு வந்துவிட்டேன்" என்றார் பீர்பால். "உங்கள் பாதம் என் கடையில் பட நான் என்ன பாக்கியம் செய்து இருக்கிறேன்" என்று மன்சூர் உணர்ச்சி வசப்பட்டான்.

"இந்தா நீ செய்த அருமை யான வேலைக்கு கூலி" என்று பீர்பால் ஒரு தங்க காசை கொடுத்தார்.

"இருங்கள் மீதிப்பணத்தை தருகிறேன்" என்று தன் சட்டைப்பையை துளாவ உடனே பீர்பால் அவனைத் தடுத்தபடி "அவசியமில்லை நீயே வைத்துக்கொள்" என்று அடுத்து கிழவியின் பையைக் காட்டினான்.

"மன்சூர்! இந்த பையை சமீபத்தில் நீ தையல் போட்டாயா?" என்று பீர்பால் கேட்டதும் அவன் அதை அடையாளம் கண்டு கொண்டான். "ஆம்! பிரபு" என்ற மன்சூர் பையில் ஓரிடத்தைச் சுட்டிக்காட்டி "இந்த இடம் கிழிந்திருந்தது. இதை தையல் போட்டு சரி செய்தேன்.

ஒரு மாதம் முன்பாக குல்ஷா என்னிடம் இந்த வேலையைச் செய்யச் சொன்னார்" என்றான்.

பீர்பாலுக்கு தேவையான தகவல் கிடைத்துவிட அவர் மன்சூரிடம் விடைபெற்றுக் கொண்டு வீடு திரும்பினார். மறுநாள் தர்பார் கூடியது. பீர்பால் ஏற்பாடு செய்திருந்த படி கிழவியும் குல்ஷாவும் தர்பாருக்கு அழைத்து வரப் பட்டிருந்தனர்.

அக்பர் பீர்பாலை நோக்கி "இந்தக் கிழவி கூறியது உண்மைதானா? இல்லை வீணாக குல்ஷா மீது பழி சுமத்துகிறாளா?" என்று கேட்டார். "கிழவி கூறியதுதான் உண்மை" என்று அழுத்தம் திருத்தமாக கூறியதும் பீர்பால் தான் உண்மையை கண்டறிந்த விதத்தை விளக்கினார்.

அதைக் கேட்ட குல்ஷாவின் முகம் பீதியினால் வெளுத்துக் கை கால்கள் நடுங்கின. கோபமடைந்த அக்பர், "குல்ஷா! பீர்பால் கூறுவது



உண்மை தானா? மோசடி செய்தது நீதானா? பொய் சொன்னால் உன்னை இங்கேயே கொன்று விடுவேன்" என்று சீற குல்ஷா, "பிரபு! பீர்பால் கூறுவது உண்மையே! பேராசை என்கண்களை மறைத்து விட்டது" என்று அழுதான்.

கிழவிக்கு அவள் பொற்காசுகள் திரும்பக் கிடைத்தன. பாவம் குல்ஷாவுக்கு சிறையில் கம்பி எண்ண நேரிட்டது.

பீர்பாலின் புத்திசாலித்தனத்தை கண்ட அக்பர் அவருக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தார். அனைவரும் வியந்து பாராட்டினர்.

# இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சினையும்



இந்தப்பின்னணியில்தான் இந்தியா, கொழும்பை தனது வழிக்குக் கொண்டுவருவதற்காக இலங்கையின்வட கிழக்கில் கொதித்துக் கொண்டிருந்த இனப்பிரச்சினையைக் கையில் எடுத்தது. அதுவரைக்கும் இலங்கையின் உள்ளக விடயமாகக் கருதப்பட்ட தமிழர்பிரச்சினை, இந்தியாவின் பிராந்திய நலன்களுடன் இணைக்கப்பட்டது. எனவே, இலங்கைப்பிரச்சினையை இந்திரா காந்தி கையில் எடுத்தமை என்பது, முழுக்க முழுக்க இந்திய நலன்களை இலக்காகக் கொண்டது என்பதை விளங்கிக் கொள்வதில் சிரமப்பட வேண்டியதில்லை.

"இந்திராகாந்தி, இலங்கையின் இனப்பிரச்சினையை ஆகக்குறைந்தது தனது இரு இலக்குகளை அடையப் பயன்படுத்திக்கொண்டார்- முதலாவது, ஜெயவர்த்தனவை இந்திய முன்னுரிமைகளுக்கு ஏற்றவாறு ஆட்டுவித்தல், இரண்டாவது, 1967 இல் நழுவவிட்ட, தமிழ் நாட்டில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியை நிலை நிறுத்தல். அகாலிதளத்தை நிலைகுலையச் செய்வதற்காக, இந்திரா காந்தி எவ்வாறு காலிஸ்தான் தீவிரவாத குழுவிற்கு ஆதரவுவழங்கினாரோ, அதனையொத்த அணுகுமுறையையே ஜெயவர்த்தன விடயத்திலும் கைக்கொண்டார். இந்தியாவின் பிராந்திய கொள்நெறிச் சட்டகத்திற்கு வெளியில் சென்றுகொண்டிருந்த ஜெயவர்த்தனவிற்கு, பாடம் புகட்டுவதற்காக ஈழவிடுதலை இயக்கங்களை ஆதரிக்கும் முடிவை எடுத்தார் இந்திரா." ( இது சங்கரன் கிருஸ்ணாவின் கூற்று)

தாயாரால் அடித்தளமிடப்பட்ட விடயத்தையே ராஜீவ்காந்தி பொறுப்பேற்றார். ஒருசில ஈழத்தேசியவாத ஆய்வாளர்கள் மிகைப்படுத்திச் சொல்வது போன்று, இந்திராகாந்தி இருந்திருந்தால் இவ்வாறு நடந்திருக்காது, என்பதெல்லாம் வெறும் மாயைதான்.

அவ்வாறான மதிப்பீடுகள் இந்திய அமைதிப்படைக் காலத்தில் நடைபெற்ற சில கசப்பான சம்பவங்களின் உந்தல்களேயன்றி வேறில்லை. இந்திராகாந்தியும் சரி, அவரது இடைவெளியை நிரப்பிய ராஜீவ்காந்தியும் சரி, ஈழத் தமிழ் இயக்கங்களின் தனிநாட்டுக் கோரிக்கையை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆதரித்திருக்கவில்லை. ஆனால், அவர்கள் அத்தகையதொரு உள்நோக்கம் கொண்டு இயங்கியதாக சிங்கள அடிப்படைவாதிகள் அளவுக்கதிகமாகவே பேசியிருக்கின்றனர்.

இதன் வெளிப்பாடுதான், கடற்படை அணிவகுப்பொன்றின்போது, படைச்சிப்பாய் ஒருவர் ராஜீவ்காந்தியை தாக்க் முற்பட்டிருந்தார்.

ஆனால், இலங்கையின் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு காணப்படவேண்டுமென்னும் ஆர்வம் அவரிடம் இருந்தது. அது எவ்வாறு அமைய வேண்டுமென்பதை இந்தியாவே தீர்மானிக்கும் என்னும் முடிவும் அவரிடம் இருந்தது. குறிப்பாக, ராஜீவ்காந்தி "இனப்பிரச்சினையை இழுத்தடிப்பதைவிட, அதற்கு தீர்வு காணப்பட வேண்டும் மென்பதில் நேர்மையான ஆர்வத்தைக் கொண்டிருந்தார்." (இக்கூற்றுக் குரியவர் சங்கரன் கிருஸ்ணா)

ராஜீவ்காந்தியின் ஆர்வத்திற்கும் விடுதலைப்புலிகளின் ஆர்வத்திற்கும் இடையில் எவ்வாறானதொரு இடைவெளி இருந்தது என்பதுதான் பிற்கால அரசியலானது. இந்தியாவின் பிராந்திய அக்கறைகளை விளங்கிக் கொண்டு முடிவுகளை எடுக்கும் ஆற்றல் தமிழத்தரப்புக்கு இருந்திருக்கவில்லை. அவர்களின் அணுகுமுறையானது இறுதியில், இந்திய ஆளும்



பிரிவினருடன் ஒரு தீராப்பகையை தோற்றுவிப்பதாக முடிவுற்றது.

இந்தியாவை வெளியேற்றுவதில் பிறேமதாசவுடன் பொதுநலன் சார் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொண்ட விடுதலைப்புலிகள், அத்தகையதொரு இணக்கப்பாட்டை ராஜீவ்காந்தியுடன் ஏற்படுத்திக் கொள்ள முடியாதிருந்தமைதான் அனைத்துப் பிரச்சினைகளினதும் அடிப்படையாக இருந்தது. ஆனால், ஆரம்பத்தில் விடுதலைப்புலிகளின் விடயத்தில் ராஜீவ்காந்தி கடும்போக்காளராக இருந்திருக்கவில்லை. ஆனால், காலப்போக்கில் அத்தகையதொரு நிலையை நோக்கி முன்நகர வேண்டிய நிலைக்கு ராஜீவ் தள்ளப்பட்டார்.

மிக இளம் வயதில், இந்தியாவின் சர்வவல்லமை பொருந்திய நபராக வெளித்தெரிந்த ராஜீவ்காந்தியின் அயலுறவு தொடர்பான முதலாவது நகர்வே தோல்வியில் முடிவடைவதை ராஜீவால் சகித்துக்கொள்ள முடியவில்லை. ஒருசில தேசியவாத எழுத்தாளர்கள் மிகைப்படுத்துவது போன்று புலிகளை பூண்டோடு அழிக்க வேண்டும் என்ற எண்ணம் இந்தியாவிற்கு இருந்திருக்கவில்லை. ஆனால், புலிகளைப் பலவீனப்படுத்தாமல் தாங்கள் விரும்பும் ஒரு அரசியல் இணக்கப்பாட்டை ஏற்படுத்தமுடியாது என்ற நிலைமை இருந்தது.

ஒரு நாட்டின் வெளிவிவகாரக் கொள்கை என்பது, அந்த நாட்டின் நலன்களை அடிப்படையாக்கொண்ட ஒன்றாகும். எந்தவொரு நாடும் தனது நலன்களை புறந்தள்ளிவிட்டு பிறிதொரு நாட்டிற்கு அல்லது அமைப்புகளுக்கு உதவுவதில்லை. இது ஒரு சாதாரண வெளிவிவகார உண்மையும் கூட. இந்த அடிப்படையில்தான் இந்திய தலையீட்டின் அரசியலையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.


இந்தியா தனது பிராந்திய நலன்களை முன்நிறுத்தியே எங்களைக்கையாண்டது. ஆனால், நாங்கள் எங்களது நலன்களில் நின்று இந்தியாவைக் கையாண்டிருக்கவில்லை. இந்தியாவின் ஆர்வங்களுடன் எங்களது நலன்களை எவ்வாறு பொருத்துவது என்னும் சூட்சுமம் எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இந்திய அமைதிப்படை காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் எவற்றையும் இங்கு நியாயப்படுத்தமுடியாது. ஆனால், எந்தவொரு அரசியல் நிலைப்பாட்டிற்கும் ஒரு படிமுறை சார்ந்த வளர்ச்சிப்போக்கு இருக்கிறது. கிடைக்கும் சந்தர்ப்பங்களை கையாண்டு, அவற்றின் போதாமையை நடைமுறை ரீதியாக நிரூபித்து முன்னேறுவதே சரியானதொரு அரசியல் அணுகுமுறையாகும். ஆனால், இந்தியாவின் நேரடித் தலையீட்டின்போது, அத்தகையதொரு அரசியல் முயற்சி எமது தரப்பிடம் தொடரப்படவில்லை.

இந்தியாவை ஓரம்கட்டிக்கொண்டு ஒரு தீர்வை ஈழத்தமிழர்கள் பெற முடியாது, என்பதையே கடந்தகால வரலாறு தெட்டத்தெளிவாக நிரூபித் திருக்கிறது. கொழும்பு, இந்த விடயத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டது.

விடுதலைப்புலிகள் இந்தியாவைத் தவிர்த்துச் சிந்திக்க, கொழும்போ இந்தியாவை முதன்மைப்படுத்தி தனது அயல் உறவைத் திட்டமிட்டது. எங்களது தவறுகளால் வெளித்தெரிந்த இடைவெளியைகொழும்பு தனது ராஜதந்திர அணுகுமுறைக்கு பயனபடுத்திக் கொண்டது.

"பிரதமர் ராஜீவ்காந்தி தெற்காசிக் கப்பலின் கப்டன். அவர் அழைத்துச் செல்லும் இடத்திற்குத்தான் நாங்கள் செல்வோம் அவரையும் இந்தியாவையும் பொறுத்துத்தான் எல்லாம். ஆனால், அவர் எங்களை சரியான திசையில் அழைத்துச் செல்கிறாரா என்பது தான் என் கவலை." 1985 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன, இந்தியாவின் பிரபல பத்திரி



கையாளரும் இந்திரா காந்தியின் நண்பருமான குல்திப் நய்யாரிடம் குறிப்பிட்டவைகளே இவை.

ஜெயவர்த்தனவின் புரிதல் இவ்வாறிருக்க விடுதலைப்புலிகளின் பார்வையோ வேறாக இருந்தது.

இன்று ஒரு புதிய சூழல் உருவாகியிருக்கிறது. எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இது முற்றிலும் புதியதொரு சூழல் என்பதுதான் உண்மை. இதுவரைக்கும் இந்திய மத்திய அரசிற்கு எது பகையுணர்வு மிக்க நெருக்கடியாக இருந்ததோ அது இப்போது இல்லை. ஈழத்தமிழ் அரசியல் சக்திகள் இந்தியாவையும், இந்தியா ஈழத்தமிழ் சக்திகளையும் அணுகுவதில் இருந்த தடைகளும் இப்போது இல்லை. எனவே, இந்தப் புதிய சூழலை ஈழத் தமிழ் அரசியல் சக்திகளும், ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வரும் தமிழ்நாட்டின் ஆதரவு சக்திகளும் எவ்வாறு கையாளப் போகின்றனர் என்பதுதான் கேள்வி.

நமது இச்சைகளில் இருந்து அரசியலைப் பார்க்காமல் சூழலிலிருந்து அரசியலைப் பார்க்கும் அணுகுமுறை ஒன்று நமக்குத் தேவைப்படுகிறது. 1987இல் இருந்த இந்தியாவல்ல, இப்போதிருப்பது. 90களில் இருந்த உலகமல்ல, இப்போது இருப்பது. அன்று (ஜெயவர்தனவின்) எந்த அணுகுமுறையை இந்தியா பிரச்சினையாகப் பார்த்ததோ, அத்தகைய பிரச்சினைகள் எவையும் இன்றைய இந்தியாவிற்கு பிரச்சினையான விடயங்களல்ல. சோவியத் சார்பு நிலை பிராந்தியக் கொள்கையல்ல, இப்போதைய இந்தியாவின் கொள்கை.

சமீபகாலமாக, அமெரிக்கா கொழும்பின் மீது குறிப்பாக அரசின் போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து அழுத்தங்களை வெளியிட்டுவருவதை இந்தப் பின்னணியிலேயே நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். கொழும்புடனான சீன நெருக்கம் இந்திய-அமெரிக்க மூலோபாய நலன்களுக்கு குந்தகமாக இருக்கிறது. ஏனெனில், இது நிக்சன் காலத்து சீனாவல்ல. எனவே எதிர்காலத்தில் இலங்கை பல்வேறு முரண்பாடுகளின் களமாக மாறக்கூடும். இத்தகைய மாற்றங்களுக்கு ஊடாக வெல்லாம் பயணிக்க வேண்டிய நிலையில்தான் இன்றைய ஈழத்தமிழர் அரசியல் இருக்கிறது.

கொழும்பின், சீன-பாகிஸ்தானிய உறவு நிச்சயமாக இந்தயாவின் விருப்புக்குரியதொன்றல்ல. அதே போன்று கொழும்பின் ஈரானிய உறவு அமெரிக்க விருப்புக்குரிய ஒன்றல்ல. கொழும்பின் சீனா-பாகிஸ்தானிய உறவானது, நிச்சயமாக இந்தியாவை ஒருவகை நிதான நிலைக்குள் முடக்கி வைக்கும் சாணக்கியமாகும். ஆனால், அமெரிக்காவை எந்தவொரு வரையறைக்குள்ளும் முடக்க முடியாது. இப்படியான பல்வேறு விடயங்களை பரிசீலிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சிலர் விவாதிப்பது போன்று ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பில் இந்தியா 87 இற்குத் திரும்ப முடியாது. ஆனால், இந்தியாவிற்கு ஒரு தீர்வு குறித்து அழுத்தத்தைக் கொடுப்பதற்கான கடப்பாடுண்டு. அந்தக் கடப்பாட்டை யார் வலியுறுத்துவது.

உலகிலேயே ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பில் இந்திய மத்திய



அரசிற்கு அழுத்தம் கொடுப்பதற்கான ஆற்றல் தமிழ்நாட்டிற்கு மட்டுமே உண்டு. இதற்கு முதலில் கடந்தகால வரலாற்றிலிருந்து நாம் அதிகம் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

*(முற்றும்)*

**நன்றி: இணையம்**

# அரசியல் தீர்வு திட்டத்தை முன்வைக்க கூட்டமைப்பு ஒத்துழைக்க வேண்டும்

## இந்தியா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென இந்தியா தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீர்வுத் திட்டம் தொடர்பில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென இந்தியா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அழுத்தம் பிரயோகித்து வருகின்றது.

இந்நிலையில் அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைப்பதில் நிலவி வரும் காலதாமதம் இந்தியாவை அதிருப்தி அடையச் செய்துள்ளது. தீர்வுத் திட்டமொன்றை பெற்றுக் கொள்வது தொடர்பில் பௌத்த மதத் தலைவர்கள் உள்ளிட்ட மதத் தலைவர்கள், வடக்கு அரசியல் தலைவர்கள் போன்றோருடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு கூட்டமைப்பை இந்தியா கோரியுள்ளது.

மேலும் நாட்டின் ஏனைய சிறுபான்மை கட்சிகளுடனும் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென இந்தியா கோரியுள்ளது. புதுடில்லிக்கு அழைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இது தொடர்பில் மேலும் பேச்சுவார்த்தை நடத்த இந்திய மத்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# எரிபொருள் விலையேற்றத்தினால் நாட்டில் போராட்டம் வெடிக்கும்

## புலனாய்வு பிரிவு எச்சரிக்கை

நாட்டில் பாரியளவில் தொடர் போராட்டங்கள் இடம்பெறக்கூடிய அபாயம் காணப்படுவதக புலனாய்வு பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எரிபொருள் விலையேற்றம் மற்றும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு போராட்டம் நடத்தப்பட உள்ளது.

சிலாபத்தில்நடைபெற்ற மீனவர் போராட்டத்தை விடவும் மோசமானதாக இந்தப் போராட்டங்கள் அமையக்கூடும் என புலனாய்வு பிரிவினர் பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவித்துள்ளனர்.

ரூபாயின்பெறுமதிவீழ்ச்சி பொருட்கள் சேவைகளின் விலையேற்றத்திற்கு வழிகோலும் எனவும் இதனால் மக்கள் கடும் அதிருப்தி அடையக்கூடிய நிலைமை ஏற்படும் எனவும் புலனாய்வு பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

கட்சி பேதமின்றி மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# சுயாதீன சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தபால் அட்டைகள்

## நாடு கடந்த தமிழீழ அரசால் வெளியீடு

(கொழும்பு)

மக்கள் போராட்டங்களுக்கு வலுவூட்டும் வகையில் சுயாதீன சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் தபால் அட்டைகள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

ஈழத்தமிழினத்தின் மீது இலங்கையினால் கட்டவிழ்த்து விடப்பட்ட போர்க்குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகியனவற்றுக்கு சுயாதீன சர்வதேச விசாரணையின் அவசியத்தை இந்த தபால் அட்டைகள் வலியுறுத்தி நிற்கின்றன.

புலம்பெயர் தமிழர்கள், அவர்கள் வாழும் அந்தந்த நாட்டு வெளிநாட்டு அமைச்சுக்களுக்கும் ஐ.நா. மனித உரிமைச் சபையில் அங்கம் வகிக்கின்ற உலக நாடுகளது தூதரகங்களுக்கும் இந்த தபால் அட்டையை விரைந்து அனுப்பி வைக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

ஐ.நா. நிபுணர் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவாறு சுயாதீன சர்வதேச விசாரணையே இலங்கையில் நடத்தப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தும் வகையில் இந்த தபால் அட்டை அமைக்கப்பட்டுள்ளதோடு ஈழத்தமிழர்களுக்கான நீதியை உலகத்திடம் கோரி நிற்கின்றது.

(அ-2)

# சிலாபம் மீனவர் மீது துப்பாக்கி சூட்டுக்கு தாமே பொறுப்பு

## பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

சிலாபத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியமைக்கு தாமே பொறுப்பு என பொலிஸார் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரை கைது செய்து இரகசிய பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். ஆக்ரோசமாக செயற்பட்டவர்களை கட்டுப்படுத்த முடியாத சந்தர்ப்பத்தில் துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

கண்ணீர் புகைக் குண்டுத் தாக்குதல்களினால் பலன் கிடைக்காத காரணத்தினால் தற்பாதுகாப்பு நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்துமாறு உத்தரவிட்டதாக விசாரணைகளில் குறிப்பிட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பான பொறுப்பை பொலிஸார் ஏற்றுக் கொள்வதாகவும் மீனவர்கள் காயமடைந்த சம்பவம் தொடர்பான பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்படவில்லை

## பொலிஸார் கவலை

(கொழும்பு)

இலங்கையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உரிய முறையில் பதவி உயர்வுகள் வழங்கப்படாத காரணத்தினால் ஓய்வு பெற்றுக் கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

கனிஷ்ட நிலைகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் கடும் அதிருப்தியுடன் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உரிய தகுதிகளைக் கொண்டிருந்தும் கிரமமான முறையில் தமக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை என பொலிஸ் உத்தியோகத்தர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த 80 ஆயிரம் உத்தியோகத்தர்களுக்கு உரிய முறையில் பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை. இவ்வாறு இழைக்கப்பட்டுள்ள அநீதியினால் பொலிஸ் திணைக்களம் மீது அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக கடைநிலை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக 22 ஆண்டு சேவையை பூர்த்தி செய்த பலர் தமக்கு ஓய்வு வழங்குமாறு பொலிஸ் ஆணைக்குழுவிடம் கோரியுள்ளனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட போதிலும் கடந்த ஆறு ஆண்டுகளில் கடைநிலை உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை.பதவி உயர்வுகள் தொடர்பில் சரியான வழிமுறைகள் பின்பற்றப்படாமையினால் பலர் தொடர்ந்தும் ஒரே பதவியை வகிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என உத்தியோகத்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)




★ *1547-ஆறாம் எட்வேர்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.*

★ *1627-யாழ்ப்பாணத்தைத் தாக்கிய சூறாவளியில் சிக்கி பலர் இறந்தனர்.*

★ *1798-பாப்பரசர் ஆறாம் பயஸ் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.*

★ *1835-சிலியின் கொன்செப்சியோன் நகரம் நிலநடுக்கத்தில் அழிந்தது.*

★ *1910-எகிப்தியப் பிரதமர் பூட்ரோஸ் காலி (Boutros Ghali) கொல்லப்பட்டார்.*

★ *1944-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா என்வெட்டாக் தீவைக் கைப்பற்றியது.*

★ *1962-மேர்க்குரி திட்டம்: ஜோன் கிளென் பூமியை மூன்று முறை சுற்றி பூமியைச் சுற்றிய முதலாவது அமெரிக்கர் என்ற புகழைப் பெற்றார்.*

★ *1965-அப்பலோ விண்கலங்கள் சந்திரனில் இறங்குவதற்கான இடங்களை வெற்றிகரமாகப் படங்கள் எடுத்த ரேஞ்சர் 8 விண்கலம் சந்திரனுடன் மோதியது.*

★ *1987-அருணாசலப் பிரதேசம் அசாமில் இருந்து பிரிந்து தனி மாநிலமாகியது.*

**பிறப்புக்கள்**

★ *1876-கா.நமச்சிவாயம், தமிழறிஞர் (இ.1936)*

★ *1937-றொபேர்ட் ஹியூபர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய வேதியியலாளர்.*

★ *1945-ஜியார்ஜ் ஸ்மூட், அமெரிக்க விண்ணியல் அறிஞர்*

★ *1963-சார்ள்ஸ் பார்க்லி, அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்*

**இறப்புக்கள்**

★ *1896-ஆணல்ட் சதாசிவம் பிள்ளை, ஈழத்தின் தமிழறிஞர், புலவர் (பி.1820)*

★ *1907-ஹென்றி முவாசான், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு வேதியியலாளர் (பி.1852)*

★ *1916-கிளாஸ் ஆர்னல்ட்சன், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி.1844)*

★ *1972-மரீயா கோப்பர்ட் மேயெர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (பி. 1906)*

★ *1976-றெனே காசின், நோபல் பரிசு பெற்றவர் (பி.1887)*

★ *2008-டி.ஜி.எஸ்.தினகரன், கிறிஸ்தவ மறைபரப்புனர் (பி.1935)*

# இலத்தீன் அமெரிக்க பயணம் தோல்வி!

## நாடு திரும்பினர் அமைச்சர்கள்

(நெடுந்தீவு)

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை முறியடிப்பதற்கு ஆதரவு கோரி இலத்தீன் அமெரிக்க மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு அமைச்சர்கள் மட்டக் குழுக்களை இலங்கை அரசாங்கம் அனுப்பியிருந்தது.

எனினும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தவிர ஏனைய அமைச்சர்களால் இந்த முயற்சியில் அவ்வளவாக வெற்றி பெறமுடியவில்லை என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு அனுப்பப்பட்ட இலங்கையின் அமைச்சர்கள் அந்த நாடுகளின் பிரதி அமைச்சர் நிலைக்கு மேலுள்ள எவரையம் சந்திக்க முடியாமல் திரும்பி வந்துள்ளனர்.

அத்துடன் பொறுப்புக்கூறும் விவகாரத்தில் ஐ.நாவுடன் இணைந்து பணியாற்றுமாறு இலத்தீன் அமெரிக்க நாடுகள் இலங்கையிடம் கூறியுள்ளதாகவும் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அதேவேளை ஜெனீவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் அல்லது பதில் நாடு ஒன்றே அமெரிக்காவின் பின்புல ஆதரவுடன் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

# தடையையும் மீறி இறால் பிடிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## கரைச்சி பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

பொருளாதார வளர்ச்சியைக் கருத்திற் கொண்டும் மீனவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடனும் சுண்டிக்குளம் கடல் ஏரியில் இறால் பிடிப்பதற்கு தடை விதித்துள்ள கரைச்சி பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசம் தடையை மீறி இறால் பிடிப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளது.

இறால் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் சுண்டிக்குளம் கடல் ஏரியில் கடந்த 22 ஆம் திகதி 38 இலட்சத்து 3 ஆயிரத்து 720 இறால் குஞ்சுகள் விடப்பட்டன. இந்த இறால் குஞ்சுகள் முழுமையாக வளர்ச்சியடைவதற்கு 3 மாத காலம் தேவை.

இதனால் இக்கடல் ஏரியில் இறால் பிடிப்பதற்கு சமாசத்தினால் தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது சமாசத்தின் தடையையும் மீறி சிறுகண் வலைகளைப் பயன்படுத்தி இரவு நேரங்களில் திருட்டுத் தனமாக இறாலைப் பிடித்து வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளார்கள்.

மீனவர்கள் இச் செயற்பாட்டினால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டது மட்டுமல்லாமல் இறால் உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஒரு இறால் 50 கிராம் வளர்ச்சியடையக் கூடியது. ஒரு கிலோவில் 20 இறால்கள் வரை அடங்குகின்றன. இந்த நிறையில் இறால் வளர்ச்சியடைய முன்பு பிடிக்கப்படுவதனால் ஒரு கிலோவில் 50-60 இறால்கள் அடங்குகின்றன.

இதனால் பொருளாதாரரீதியில் நாட்டிற்கும் சமூகத்திற்கும் பாரிய நஷ்டம் ஏற்படுகின்றது என சமாசம் தெரிவித்துள்ளது. வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த இறால் வளர்ப்புத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மேர்வினிடம் விசாரணை நடத்த சி.ஐ.டி. உத்தேசம்

பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரிடம் விசாரணை நடத்திய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒழுக்காற்று குழுவினர் எடுத்த தீர்மானத்திற்கு அமைய புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தவுள்ளனர்.

அமைச்சரிடம் விசாரணை நடத்துமாறு சுதந்திரக் கட்சி ஒழுக்காற்று குழுவினர் புலனாய்வுப் பிரிவினரிடம் கோரியுள்ளனர்.

அமைச்சர் மேர்வின் சில்வா களனி பிரதேச வர்த்தகர்களிடம் கப்பம் கோரல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாக களனி பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன ரணவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் களனி பிரதேச சபை உறுப்பினர்களிடமும் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டுள்ளது. (அ-2)

# ஆண்டாங்குள அம்மன் ஆலயம் அழிவடையும் சாத்தியமுள்ளது

## செல்வம் எம்.பியிடம் முறைப்பாடு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆண்டாங்குளம் கிராமத்தில் அமைந்திருந்த சிறிய நாகபூசணி அம்மன் ஆலயம் அடியோடு இல்லாமல் போகும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கவனத்திற்கு அக்கிராம மக்கள் கொண்டு வந்துள்ளனர்.

ஆண்டாங்குளம் கிராமத்தில் கடந்த 1986 ஆம் ஆண்டு முதல் தகரத்தினால் அமைக்கப்பட்ட நிலையில் சிறிய நாகபூசணி அம்மன் ஆலயம் காணப்பட்டது. இவ் ஆலயம் ஷெல் வீச்சு தாக்குதலுக்கு உள்ளான நிலையில் சேதமடைந்து காணப்பட்டது.

இந்த நிலையில் இவ் ஆலயம் 2010 ஆம் ஆண்டு அக்கிராம மக்களினால் புனரமைக்கப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் இவ் ஆலயம் பலவந்தமாக அகற்றப்பட்டுள்ளது. இதனால் இவ் ஆலயம் அடியோடு இல்லாது போகக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆண்டாங்குளம் கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட இந்துக்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் பழைமை வாய்ந்த இவ் ஆலயம் இல்லாமை மக்கள் மத்தியில் கவலையை உண்டு பண்ணியுள்ளதாக அம்மக்கள் அவரிடம் தெரிவித்துள்ளனர். (அ-2)



சவுதி அரேபிய அரசாங்கத்தினால் இலங்கை மக்களுக்கு இலவசமாக அண்மையில் 200 மெற்றிக் தொன் பேரீச்சம்பழங்கள் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன. பேரீச்சம்பழங்களை இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் அப்துல் அஸீஸ் பின் அப்துல் ரஹ்மான் அல் ஜமால், புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சரான பிரதமர் டி.எம்.ஜயரட்ணவிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

# வரி செலுத்தப்படாத சொத்துக்களை சுவீகரிக்கும் உரிமை மாநகரசபைக்குண்டு

அரசாங்கம் வரி ஏய்ப்பில் ஈடுபட்டுள்ளதாக கொழும்பு மாநகரசபை குற்றம் சுமத்தியுள்ளனது. அரசாங்கம் கொழும்பு மாநகரசபைக்கு 1.2 பில்லியன் ரூபா வரியினை செலுத்தத் தவறியுள்ளதாக மாநகரசபையின் பிரதி மேயர் டைடஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி இல்லம், விசும்பாயவில் அமைந்துள்ள பிரதமர் இல்லம், காலிமுகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகை, திறைசேரி உள்ளிட்ட பல முக்கிய அரசாங்க நிறுவனங்கள் மாநகரசபை வரிகளை செலுத்தவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்க அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான வரிகளும் செலுத்தப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வரி செலுத்தப்படாத சொத்துக்களை சுவீகரிக்கும் உரிமை மாநகர சபைக்கு இருக்கின்ற போதிலும் அரசாங்க சொத்துக்களை சுவீகரிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலுவை வரிகளைச் செலுத்துமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரையில் வரிகள் செலுத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கச்சதீவு ஆலய துப்புரவு பணியில் படையினர்

(நெடுந்தீவு)

மார்ச் மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் துப்புரவுப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடற்படையினர் இப்பணியை மேற்கொண்டு வருவதாக அங்கு சென்று திரும்பிய விழாக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

உற்சவத்தை முன்னிட்டு அங்கு நிலைமைகளை அவதானித்து வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு நெடுந்தீவு பிரதேச செயலர், நெடுந்தீவு பங்குத் தந்தை ஆகியோரைக் கொண்ட குழுவினர் கடந்த புதன்கிழமை அங்கு சென்று திரும்பினர்.

உற்சவத்திற்கு இலங்கை- இந்திய நாடுகளில் இருந்து பெருமளவு மக்கள் வரலாம் என எதிர்பார்க்கப்படுவதால் அவர்களுக்கான வசதிகளைக் கவனிப்பது குறித்து குழுவினர் உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பிரெஞ்சு ஊடகத்தை கவர்ந்த நீதிக்கான நடைபயணம்

ஐ.நா. மனித உரிமைச் சபை நோக்கிய நீதிக்கும் சமாதானத்துக்குமான நடை பயணம் பிரெஞ்சு ஊடகங்களின் கவனத்தைப் பெற்று வருகின்றது. ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கேட்டுச் செல்லும் இந்த நடைபயணம் குறித்தான செய்தி பிரெஞ்சு ஊடகங்களின் கவனத்தைப் பெற்றுள்ளமை விடுதலைச் செயற்பாட்டாளர்களுக்கு பெருத்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

சுயாதீனவிசாரணைக்குரிய ஆண்டாக செயற்படுவோம். மக்கள் போராட்டங்களை வலுப்படுத்துவோம் எனும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முழக்கத்தை பறைசாற்றியவாறு லண்டனில் இருந்து ஜெனீவா நோக்கிய இந்த நடைபயணம் 650 கிலோ மீற்றர்களைக் கடந்து பிரான்ஸ் தேசத்தில் உறுதியுடன் வீறுநடை போட்டுக் கொண்டுள்ளது.

தமிழர் மீதான இலங்கை அரசினது இனப்படுகொலை குறித்தான சுயாதீன சர்வதேச விசாரணை ஈழத்தில் மனித உரிமைகளைக் கண்காணிப்பகத்தை ஐ.நா. நிறுவ வேண்டும், ஈழத்தில் பொதுவாக்கெடுப்பொன்று நடத்தப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை இந்த நடைபயணம் வலியுறுத்துகின்றது.

கடந்த ஜனவரி 28 ஆம் திகதி லண்டனில் இருந்து தொடங்கிய இந்த நடைபயணம் ஐ.நா. மனித உரிமைச் சபைக் கூட்டத் தொடர் தொடங்குகின்ற எதிர்வரும் 27 ஆம் நாளில் அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நீதிக்காய் ஒன்றுபடுவோம் எனும் மக்கள் எழுச்சிப் போராட்ட நிகழ்வில் நிறைவு செய்யவுள்ளது. (அ-2)

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு 21 பேர் பலி; 45 பேர் படுகாயம்



பாகிஸ்தானில் மசூதிக்கு வெளியே தற்கொலைப் படையை சேர்ந்த நபர் ஒருவர் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் 21 பேர் பலியாகினர். மேலும் 45 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானின் பராஷினர் என்ற மக்கள் அதிகம் கூடும் சந்தை பகுதியின் அருகே மசூதி ஒன்று உள்ளது.

வெள்ளிக்கிழமை தொழுகையை முடித்து மசூதியில் இருந்து அனைவரும் வெளியே வந்து கொண்டிருந்தனர். அப்போது அவ்வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைப்படையை சேர்ந்த மர்ம நபர் உடலில் சுமந்து வந்த் வெடிகுண்டை வெடிக்கச் செய்தார்.

இதில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களும் கடைப் பகுதிகளும் சேதமடைந்தன. 21 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 45 பேர் படுகாயம் அடைந்தனர்.

காயமடைந்தவர்களில் பலரது நிலை பரிதாபமாக இருப்பதால் பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. (அ-2)

# ஈரான் விவகாரம் குறித்து ஆராய்வதற்கு ஒபாமாவின் ஆலோசகர் இஸ்ரேல் பயணம்

ஈரான் அணு ஆயுதங்கள் தயாரித்து வருகின்றது என அமெரிக்கா, மேற்குலக நாடுகள் குற்றம்சாட்டி வருகின்றன. இதை தொடர்ந்து ஈரான் மறுத்து வருகின்றது.

இந்நிலையில் சமீபத்தில் நடத்திய தாய்லாந்து தலைநகர் பாங்கொங் குண்டு வெடிப்பு தாக்குதல்களுக்கு ஈரான்தான் காரணம் என இஸ்ரேல் குற்றம்சாட்டி வருகின்றது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான டாம் டோனிலோன் அவசர பயணமாக நேற்றைய தினம் இஸ்ரேல் புறப்பட்டு சென்றார்.

அங்கு அவர் 2 நாட்கள் தங்கி இருந்து ஈரான், சிரியா விவகாரம் குறித்து முக்கிய ஆலோசனை நடத்துவார்.

ஈரான் நாடு சமீபத்தில் அணு உலையில் யுரேனியம் செறிவூட்டலை தொடங்கி விட்டதாக அதிகாரபூர்வமாக அறிவித்தது என்றாலும் அணு உலை விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த தயார் என்றும் அந்த நாடு அறிவித்துள்ளது.

இது அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளை சற்று நிதானிக்க வைத்துள்ளது.

இஸ்ரேல் நாட்டின் வடகிழக்கு எல்லையில் அமைந்துள்ள சிரியாவில் உள்நாட்டு கலவரம் தீவிரம் அடைந்து வருகின்றது.

எனவே ஈரான், சிரியா நாடுகளின் பிரச்சினைகள் குறித்து அமெரிக்க சிறப்பு தூதர் ஆலோசிப்பார் என தெரிகிறது. (அ-2)

# ஐதராபாத்தில் தீ விபத்து; ஏழு பேர் உடல் கருகி பலி

ஐதராபாத்தை அடுத்த ரங்காரெட்டி மாவட்டத்தில் குந்த்லா போச்சம்பள்ளி என்ற கிராமத்தில் பல்வேறு பகுதிகளில் அடுக்குமாடி வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

அதில் கட்டட வேலை செய்து வரும் தொழிலாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் தங்குவதற்காக ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 100 குடிசைகள் அமைக்கப்பட்டிருந்தன.

அவற்றில் சுமார் 400 பேர் தங்கி இருந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் மதியம் ஒரு மணிக்கு ஒரு குடிசையில் காஸ் சிலிண்டர் திடீரென வெடித்து தீப்பற்றியது.

இந்த தீ மளமளவென பிற குடிசைகளுக்கும் பரவியது. தீயணைப்பு படையினர் விரைந்து வந்து போராடி தீயை அணைத்தனர். இருப்பினும் 100 குடிசைகளும் எரிந்து சாம்பலாகின. இந்த பயங்கர தீ விபத்தில் சிக்கி 4 குழந்தைகள், 2 பெண்கள் உட்பட 7 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். (அ-2)

## தமிழகத்தில்

# கடலோர கண்காணிப்பை தீவிரப்படுத்த புதிதாக மரைன் பொலிஸ் நிலையங்கள்




தமிழக கடற்கரைப் பகுதியில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தி கடத்தலைத் தடுக்கவும் மீனவர்களின் பாதுகாப்புக்காகவும் புதிதாக 11 இடங்களில் மரைன் பொலிஸ் நிலையம் அமைக்கப்படுகிறது.

ரூபா 15 இலட்சத்தில் அமைக்கப்படவுள்ள மரைன் பொலிஸ்நிலையத்துக்கு இடம் தேர்வு செய்யும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

கடற்கரையிலிருந்து 12 கடல் மைல் தூரத்துக்கான பாதுகாப்புக்களை இந்த மரைன் பொலிஸார் கவனித்து வருகின்றனர்.

குறிப்பாகக் கடலோரங்களில் தீவிரவாத உடுருவல்கள், போதைப்பொருட்கள் கடத்தல் ஆகியவை குறித்து இவர்கள் கண்காணிப்புப் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது சென்னை, காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், திருவாரூர், நாகை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தற்போது 12 மரைன் பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் மும்பையில் கடல் வழியாக ஊடுருவிய தீவிரவாதிகள் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் தங்கியிருந்த ஹோட்டலில் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதனைக்கருத்திற்கொண்டு நாடுமுழுவதும் கடலோர பாதுகாப்பினை தீவிரப்படுத்துமாறு மாநிலங்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியிருந்தது.

இதன் அடிப்படையில் கடலோர பாதுகாப்பு படையினருடன் இணைந்து பணியாற்றும் வகையில் தமிழகத்தில் கூடுதலாக 18 இடங்களில் மரைன் பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படுகிறன.

இடம்தேர்வு செய்யப்பட்ட பின் 15 இலட்சம் செலவில் ஒவ்வொரு இடங்களிலும் மரைன் பொலிஸ் நிலையங்கள் கட்டும்பணி ஆரம்பமாகும். (அ-2)

# சிரியாவுக்கு எதிராக ஐ.நா.தீர்மானத்தின் எதிரொலி; நிமிடத்திற்கு 4 ரொக்கெட்கள் வீதம் வீசி தாக்குதல்

(டமாஸ்கஸ்)

சிரிய ஜனாதிபதிக்கு எதிராக ஐ.நா.சபையில் தீர்மானம் நிறைவேற்றிய நிலையில் அந்நாட்டு பொதுமக்கள் மீது நிமிடத்திற்கு 4 ரொக்கெட்டுக்களை வீசி இராணுவம் கடுமையான தாக்குதலை நடத்தி வருகிறது.

சிரிய ஜனாதிபதி பஷீர் அல் ஆசாத் பதவியிலிருந்து விலகக்கோரி கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் கலவரம் நடந்து வருகிறது. இந்தத் தாக்குதலில் இதுவரை 70 ஆயிரம் பேர்வரை பலியாகியுள்ளனர்.

இதனையடுத்து சிரியாவில் மனித உரிமைகள் மீறுதல் போக்கு மற்றும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடைபெறுவதைக் கண்டிக்கும் தீர்மானம் ஐ.நா.பொதுச்சபையில் கொண்டுவரப்பட்டது.

பின்னர் அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. சிரியாவுக்கு எதிராக ஐ.நா. சபையில் தீர்மானம் நிறைவேற்றிய நிலையிலும் இராணுவ தாக்குதல் நிறுத்தப்படவில்லை. மாறாக நேற்று முன்தினம் சிரிய இராணுவத்தினர் கடுமையான தாக்குதலைத் தொடுத்தனர்.


ஜனாதிபதி ஆசாத்துக்கு எதிர்ப்பு நிலவும் ஹோம்ஸ் மாகாணத்தில் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாக ரொக்கெட் குண்டுகளை வீசினார்கள். அவ்விடத்தில் உள்ள வீடுகள் மீது குண்டுகள் விழுந்தன. இதுவரையில் இல்லாத வகையில் இராணுவத்தினர் தாக்குவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இத்துடன் ஹோம்ஸ் நகர் மீது வழக்கத்துக்கு மாறாக ஏராளமான போர் விமானங்களும் உளவு விமானங்களும் பறந்தபடி இருந்தன. இராணுவத்தின் இந்தத் தாக்குதலில் எவ்வளவு பேர் உயிரிழந்தனர் என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை.

அன்றையதினம் ஹோம்ஸ் நகரில் நடந்த தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேர் உட்பட மொத்தம் 41 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இஸ்ரேலியர்களை கொல்வோம்; பழிக்குப்பழி வாங்குவோம்

## ஹிஸ்புல்லா தலைவர் ஆவேசம்



(இஸ்ரேல்)

கடந்த சில நாட்களுக்கு முன் இந்தியாவின் தலைநகர் டில்லியிலும் தாய்லாந்தின் தலைநகர் பாங்கொங்கிலும் நடந்த தொடர் குண்டு வெடிப்பு தாக்குதல்களுக்கு ஈரான்தான் காரணம் என இஸ்ரேல் குற்றம்சாட்டி வருகின்றது.

மேலும் லெபனான் ஹிஸ்புல்லா தீவிரவாத இயக்கம் தான் காரணம் என்றும் இஸ்ரேல் குற்றம்சாட்டி வருகின்றது.

இதை ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா மறுத்துள்ளார்.

ஹிஸ்புல்லா கமாண்டர் இமாத் முக்னியே சிரியாவில் 2008 ஆம் ஆண்டு காரில் சென்ற போது வெடிகுண்டு தாக்குதலில் பலியானார். அதன் 4 ஆம் ஆண்டு நினைவு ஊர்வலம் பெய்ரூட்டில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் பங்கேற்ற ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்ல பேசுகையில்,

இஸ்ரேலுக்கு எதிராக நாங்கள் தாக்குதல் நடத்தவில்லை என்பதை உறுதியாக கூறுகின்றேன்.

எனினும் சிரியாவில் 2008 ஆம் ஆண்டு எங்கள் தலைவர் இமாத் முக் னியே மர்மமான முறையில் கொல்லப்பட்டதற்கு பழிக்கு பழி வாங்குவோம்.

அவரை கொன்ற இஸ்ரேலியர்களை கொல்வோம் என்று ஆவேசமாக கூறினார். (அ-2)

# சீனாவில் அதிகளவான குழந்தைகள் புகைபிடிக்கும் பழக்கத்திற்கு அடிமை

## அதிர்ச்சி தகவல் வெளியீடு

உலகிலேயே சீனாவில்தான் 30 கோடிக்கும் அதிகமான நபர்கள் புகைபிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளனர். இவர்களில் வளரிளம் பருவத்தினர்தான் அதிகம் என்ற அதிர்ச்சித்தகவல் வெளியாகியுள்ளது.

சீன அரசின் சுகாதாரத்துறை துணை அமைச்சர் ஹுவாங் ஜீபூ வெளியிட்ட அறிக்கையில், சீனாவில் 30 கோடிக்கும் அதிகமான பேர் புகைபிடிக்கின்றனர். புகைபிடிக்கும் பழக்கமே இல்லாமல். ஆனால் புகைபிடிப்பவர்கள் விடும் புகையால் பாதிக்கப்படுபவர்கள் மட்டும் 74 கோடிப்பேர். புகையிலை தொடர்பான நோய்களால் ஆண்டுதோறும் சீனாவில் 12 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர். அதேநேரம் புகைபிடிக்கும் பழக்கத்தில் சிக்கும் வளரிளம் பருவத்தினர் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றது.

கடந்தாண்டில் சீன புகையிலை கட்டுப்பாட்டு கூட்டமைப்பு 800 பாடசாலைகளில் புகையிலைப்பழக்கம் தொடர்பான ஆய்வுகளை நடத்தியது. இதில் இவற்றில் 2 சதவீதம் பாடசாலைகள் மட்டுமே புகைபழக்கம் இல்லாத சூழல் கொண்டதாக இருந்தன. (அ-2)

யாழ்ப்பாணம்.



# பாராளுமன்ற நடவடிக்கைகள் தரம் குறைந்து செல்கின்றன

## பிராந்திய நாடுகளின் நிலையும் இதுவே என்கிறார் ஹக்கீம்

(கொழும்பு)

ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது வருவதை வழமையாக கொண்டுள்ளது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். ஜனாதிபதி திடீரென முன்னறிவிப்பின்றி பாராளுமன்றத்திற்கு சமுகம் அளிப்பதாக இருந்தாலும் கூட எவ்வாறோ அதனை அறிந்துணர்ந்து வழமைக்கு மாறாக பாராளுமன்ற உறுப்பினர்களில் அதிகமானோர் ஆசனங்களில் வந்து அமர்ந்திருப்பதை காண முடிகின்றது என நீதியமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கை வெளிப்படைத் தன்மைக்கான சர்வதேச அமைப்பு மனித உரிமைகளுக்காக தெற்காசிய அமைப்பு என்பன கூட்டாக ஏற்பாடு செய்திருந்த பாராளுமன்ற நடவடிக்கைகள் 2002 என்ற செயலமர்வில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாராளுமன்ற நடவடிக்கைகளின் தரம் குறைவடைந்து கொண்டே போவது இந்த நாட்டுக்கு மட்டும் உரியதல்ல. இவ்வாறான நிலைமையை பிராந்திய நாடுகளிலும் பொதுவாக ஏனைய நாடுகளிலும் அவதானிக்க கூடியதாகவுள்ளது.

இந்நாட்டில் சிறந்த உயிர்த்துடிப்புள்ள சமூக குடியியல் கலாசாரமும் முதிர்ச்சி பெற்ற ஊடக கலாசாரமும் நீண்ட நெடுங்காலமாக நடைமுறையில் இருந்து வருகின்றன. அரசின் முக்கிய அங்கங்களாக நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கத்துறை, நீதித்துறை என்பன நிலைபெற்றுள்ளன.

பாராளுமன்ற அமர்வுகளின் போது உறுப்பினர்கள் தரக்குறைவாக நடந்து கொள்வதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இந்நிலைமை ஏற்படுவதற்கு வெளிப்புற காரணிகளும் ஏதுவாக உள்ளன. சுற்றாடல் காரணிகளும் இதற்கு வாய்ப்பாக அமைந்து விடுகின்றன.

1970 ஆம் ஆண்டிலிருந்தே பாராளுமன்ற நடைமுறைகளில் பாரதூரமான தேய்வு ஆரம்பமாகி விட்டதாக தோன்றுகின்றது.

எடுத்துக்காட்டாக முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை விளிக்கும் பொழுது அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் தொகுதியை குறிப்பிட்டு அதன் கௌரவ உறுப்பினர் என கூறுவது வழக்கமாக இருந்தது. அவ்வாறு கண்ணியமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட்டு வந்தனர். பாராளுமன்ற விவாதங்களில் போது உறுப்பினர்கள் மிகவும் கண்ணியமாக நடந்து கொண்ட நிலை படிப்படியாக மாற்றம் அடைந்து வந்துள்ளது. முன்னரெல்லாம் பாராளுமன்ற விவாதங்கள் மிகவும் உயிர்த்துடிப்புள்ளனவாக இருந்தன.

ஜனநாயகத்துக்கு பெயர் பெற்ற பிரித்தானிய மக்கள் அவையில் பிரதமரை கேள்விக்குட்படுத்தும் நிகழ்வு இடம்பெறும் பொழுது அதனை பார்ப்பதே அலாதியானதாக இருக்கும். உறுப்பினர்கள் ஆர்வம் மேலிட்டு காணப்படுவார்கள். பாராளுமன்ற பொதுமக்கள் களரி நிரம்பி வழியும்.

இலங்கையில் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது வருவதை தற்பொழுது வழமையாக கொண்டுள்ளது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். ஜனாதிபதி திடீரென முன்னறிவிப்பின்றி பாராளுமன்றத்திற்கு சமூகம் அளிப்பதாக இருந்தாலும் கூட எவ்வாறோ அதனை அறிந்துணர்ந்து வழமைக்கு மாறாக பாராளுமன்ற உறுப்பினர்களில் அதிகமானோர் ஆசனங்களில் வந்து அமர்ந்திருப்பதை காண முடியும்.

பாராளுமன்ற அமர்வுகளில் உயிரோட்டமுள்ளதாக ஆக்குகின்ற பொறுப்பு அதன் உறுப்பினர்களைச் சார்ந்ததாகும்.

பாராளுமன்ற ஜனநாயகத்தை அர்த்தமுள்ளதாக ஆக்குவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் உரிய பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்றார். (அ-2)

# மாதாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக செயலாளர் திருமதி ரு.நித்தியானந்தன் அறிவித்துள்ளார். (அ)

# வடக்கு, கிழக்கில் மக்களுக்கு தேவை அபிவிருத்தியே; அதிகார பகிர்வு அல்ல

## பிரதியமைச்சர் முஸ்தபா தெரிவித்தார்

வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்கு இன்று தேவையாக இருப்பது அபிவிருத்தியே. அதிகாரப் பகிர்வு அல்ல என்று பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

சில கட்சிகள் வடக்கு, கிழக்கின் அதிகாரப் பகிர்வு பற்றி பேசுகின்றன. வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்கு இன்று தேவையாக இருப்பவை நல்ல வீட்டு வசதி, பாடசாலைகள், சுகாதார வசதிகள் போன்றவற்றுடனான சிறந்த வாழ்க்கையே. இந்த வசதிகளை அவர்கள் பெறும் போது அதிகார பரவல் உட்பட எல்லாவற்றையும் அவர்கள் தேசிய ரீதியிலேயே சிந்திப்பார்கள்.

மக்களைச் சார்ந்து வாழும் அரசியல்வாதிகள் வறுமையில் வாழும் மக்கள் மத்தியில் வறுமையையே ஆயுதமாகப் பயன்படுத்தி அரசியல் ஆதாயங்களைப் பெற முனைகின்றனர்.

அதிகாரப் பகிர்வு இருந்தால் வறுமை மறைந்து விடுமென்று அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

ஆனால் வடக்கு, கிழக்கு மக்களுக்கு தேவை அபிவிருத்திக்கான அதிகாரப் பகிர்வு அல்ல. அரசியல்வாதிகள் இனவாதத்தை தமது அரசியல் மேடையாகப் பயன்படுத்துகின்றனர். இந்த நிலைமை பற்றி தமிழ் கூட்டமைப்பு சிந்திக்க வேண்டும். அரசியல் தலைமைத்துவம் உட்பட அனைத்து நலன்களையும் எல்.ரி.ரி.ஈ. அழிந்து விட்டது.

தமிழ் கூட்டமைப்பு அரசுடன் இணைந்து வடக்கு, கிழக்கை கட்டியெழுப்ப வேண்டும். அமெரிக்கா ஒரு கறுப்பு இனத்தவரை ஜனாதிபதியாக்கியுள்ளது. ஆனால், அமெரிக்காவில் எவரும் ஒருவரின் நிறத்தைப் பற்றியோ சமயத்தைப் பற்றியோ இனத்தைப் பற்றியோ பேசுவதில்லை.

அதனால் தான் அவர்கள் எல்லா நலன்களுடன் சிறப்பாக வாழ்கின்றனர். ஆனால் ஆபிரிக்காவின் நிலைமை வித்தியாசமானது. அவர்கள் மிகுந்த வறுமையில் வாடுகின்றனர். அங்கு இந்த நிலைமை ஏனெனில் நிறம், சமயம், இனம் போன்ற வேறுபாடுகள் காரணமாகவே அரசியல்வாதிகள் இவற்றை தமது அரசியல் மேடையாகப் பயன்படுத்துவதாலேயே மக்களின் வாழ்க்கை மேலும் சீரழிகிறது. ஆதலால் வடக்கு, கிழக்கு மக்களும் தேசிய ரீதியில் சிந்திக்கும் நிலைமையை உருவாக்க வேண்டும் என அவர் கூறினார். (அ-2)

# வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளை நாட்டினுள் நுழைக்க முயற்சி

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளை நாட்டிற்குள் கொண்டு வருவதற்கு சிலர் முயற்சிப்பதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

அநுராதபுர பௌத்த பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

உலக அழிவு 2012 ஆம் ஆண்டில் ஏற்படப் போவதாக சிலர் அச்சுறுத்தல் விடுக்கின்றனர். அந்த அழிவு எப்படி ஏற்படுகிறதோ தெரியவில்லை. நாட்டை சீர்குலைக்க சிலர் முயற்சிக்கின்றனர்.

வெளிநாட்டு சக்திகளை நாட்டிற்குள் கொண்டு வந்து முறைகேடுகளை மேற்கொள்ள திட்டமிடும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அவற்றுக்கு இடமளிக்கக் கூடாது என அவர் குறிப்பிட்டார். (அ-2)

# மக்களை நெருக்கடிக்குள் தள்ளாது நிர்வாகம் செய்யும் அரசே தேவை

## மனோகணேசன் தெரிவிப்பு



பொருட்களின் விலையை உயர்த்த அரசாங்கம் அவசியமானதா என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

உலக சந்தை விலை மாற்றத்திற்கு ஏற்ற வகையில் உள்நாட்டில் விலை ஏற்றங்களை மேற்கொள்ள அரசாங்கம் ஒன்று அவசிய மில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களை நெருக்கடியில் ஆழ்த்தாமல் நிலைமைகளை நிர்வாகம் செய்யக் கூடிய திறன் நல்ல அரசாங்கத்திற்கு இருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எரிபொருள் விலையேற்றத்தினால் நாட்டின் சகல தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக மீனவர்களும் பெருந்தோட்ட மக்களும்பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தமிழ் மக்கள் கடும் சிரமங் களை எதிர்நோக்கி வருவதாக குறிப்பிட்டுள் ளார்.

மலையகத்தில் தமிழ் மக்களை வழி நடத்த உரிய அரசியல் தலைவர்கள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பெருந்தோட்ட தமிழ் தலைவர்கள் சொகுசுவாழ்க்கை வாழ் வதில் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார். இதேவேளை எரிபொருள் விலையேற்றத்தை பயன்படுத்தி மலையக மக்களை குழப்ப சில அரசியல்வாதிகள் முயற்சிப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சுட்டிக் காட்டியுள்ளது. (அ-2)

# கொக்கட்டிச்சோலை பிரதேசம் புனித பிரதேசமாக பிரகடனம்

இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர ஆலயப் பிரதேசத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படுவதாக மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலக பிரதேச அபிவிருத்திக் குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையில் வெள்ளிக்கிழமை கொக்கட்டிச்சோலை கருணா அம்மான் கலாசார நிலையத்தில் நடைபெற்ற பட்டிப்பளை பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் புதிய மதுபானசாலைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதையடுத்து கொக்கட்டிச்சோலை பிரதேசத்தினை புனித பிரதேசமாக அறிவிப்பதாகவும் புதிய மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்து இப்பிரதேசத்தில் தேவையற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவது தண்டனைக்குரிய குற்றமாகும் என பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த கால யுத்தங்களின் போது மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட கொக்கட்டிச்சோலைப் பிரதேசம் தற்போது மீள் எழுச்சி பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மாணவர்கள் கல்விகற்று முடிந்தவுடன் தொழிலுக்காக போராட வேண்டிய நிலை

## வட மாகாண கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களின் தேவைகளை இனங் கண்டு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க இலங் கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது என வடமாகாண கல்வி, கலாசார,விளையாட்டுத்துறை அமைச் சின் செயலர் சிவலிங்கம் சத்தியசீலன் தெரி வித்துள்ளார்.

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைமைப் பணிமனைத் திறப்புவிழா நேற்று இடம்பெற்றது.இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்க சேவையினை நான் ஆரம் பித்த போது ஆசிரியர் சேவையூடாகவே ஆரம்பித்தேன். 10 வருடங்கள் ஆசிரியராக நான் பணிபுரிந்தேன்.

நிர்வாக சேவையில் தற்போது பணி புரிந்து வந்தாலும் ஆசிரியர் என்று சொல்வ தில் பெருமையடைகின்றேன்.

ஆசிரியர் தொழில் மேன்மையானது பெற் றோர்களுக்கு அடுத்ததாக ஆசிரியர்கள் கௌர விக்கப்படுகின்றார்கள்.

முன்னைய காலங்களில் ஆசிரியர் நீத வான்கள் போன்று மதிக்கப்பட்டனர்.குறிப்பாக கிராமங்களில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் சொற்படி அந்தந்தக் கிராமங்களில் உள்ள அனைவரும் செயற்படுவார்கள்.ஆனால் தற்போது அந்த நிலைமை மாற்றப்பட் டுள்ளது.

மீண்டும் அத்தகைய சூழலை ஏற்படுத் துவதோடு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட கௌரவத்தை நிலைநாட்ட வேண்டும்.

முன்னைய காலத்தில் சமூகத்தில் ஆசிரி யர்கள் பெரியோர்களாக மதிக்கக்கூடிய உய ரிய பண்பினை கொண்டிருந்தனர்.அதே போன்று தற்போது ஆசிரிய சேவையில் உள்ள வர்களும் உயர்ந்த நிலையில் தம்மை மற்ற வர்கள் வைத்திருக்க கூடியவாறு செயற்பட வேண்டும்.

ஆசிரியர் நலன்களைப் பேணுவதில் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் நீண்ட காலமாக பாடுபட்டு வருகின்றது.

அதன் செயற்பாடு மேலும் விரிவுபடுத் தப்படுவதோடு ஆசிரியர்கள் தமது தேவை களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு இலகு வாக இன்று (நேற்று)இந்தப்பணிமனை திற ந்து வைக்கப்பட்டுள்ளது.


இந்தப்பணிமனை திறந்த மையமாக செயற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆசிரியர்களின் தேவைகளை இனங்கண்டு அவர்களின் கோரிக்கைக ளுக்கு மதிப்பளித்து உரிய தீர்வினைப் பெற் றுக் கொடுக்க கல்வித்திணைக்களத்தின் ஊடாக உதவிகளைச் செய்வதற்கு இலங் கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இது தவிர ஆசிரியர்களின் ஆளுமையை வளர்த்தெடுக்க விசேட கருத்தரங்குகள், செய லமர்வுகள் என்பவற்றை நடாத்த திட்டமிட்டு வருகின்றோம்.

இவற்றை முன்னெடுக்க கல்வி அதிகாரி களினதும் ஆசிரியர் சங்க பிரதிநிதிகளினதும் ஒத்துழைப்பு மிக அவசியம்.

எல்லோரும் இணைந்து எமது சமூகத்தை



கல்வியில் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்ல உரிய ஆலோசனைகளை வழங்க முன்வர வேண்டும்.

எந்தவொரு அலுவலகத்திற்கும் இல்லாத அளவு மனிதவளத்தைக் கொண்டுள்ளது இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்.

மாணவர்கள் கல்வியை முடித்தவுடன் சர்வதேச ரீதியாக தமது தொழிலுக்காக போராட வேண்டியுள்ளது.ஆசிரியர்கள் கூறு வதை முன்னைய காலத்தில் எவ்வாறு முழுச் சமூகமும் ஏற்றுக்கொண்டதோ அதேபோன்று தற்போதுள்ள ஆசிரியர்களும் முன்மாதிரி யாக செயற்பட வேண்டும்.

எனவே கல்விக்காக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேற்கொண்டு வரும் பணி தொடர வேண்டும் என அவர் மேலும் தெரி வித்தார்.

இதேவேளை இந்த நிகழ்வில் வட மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப் பாளர் உதயகுமார், இலங்கைத்தமிழர் ஆசிரி யர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலா ளரும் ஆலோசகருமான த.மகாசிவம், சங்கத் தின் தற்போதைய தலைவர் வி.ரி.சகாதேவ ராஜா, பொதுச் செயலர் சரா.புவனேஸ்வரன், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதி பர் இக்னேஸ், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் கணபதிப்பிள்ளை எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-4-6)




## சிவராத்திரிதின நிகழ்வுகள்

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கொழும்பில் இருந்து வருகை தரும் ஏக தத்துவ பக்தர்களினால் நடத்தப்படும் ஸ்ரீ அம்மா பகவானின் விசேட பாதுகாபிஷேகமும் தீக்ஷையும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்வியங்காடு சட்டநாதர் கோவிலுக்கருகிலுள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். (அ-2-4)

* * * * * *

ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலையின் மகா சிவராத்திரி விழா இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள நிலைய மைதானத்தில் மன்ற அதிபர் ந.து.ஜெயதீஸ்வரன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ். விஜயநாந், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ. ஈஸ்வரநாதன், ஊரெழு கிராம அலுவலர் ரி. வரதராஜன், யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் நாக. தமிழிந்திரன், யாழ்ப்பாணம் ஜெகதா மொபைல் உலகம் தெ. நிஷாகரன், சுன்னாகம் ராஜா கொம்லெக்ஸ் உரிமையாளர் அ. இராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.இதில் ஆசியுரையினை ஊரெழு வடக்கு வேல்முருகன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோ.வாகீஸ் வரக்குருக்கள் வழங்குவார். (அ-78)

* * * * * *

கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா தேவி சமேத ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமாள் திருக்கோவிலில் இன்று திங்கட்கிழமை மஹாசிவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் இன்று காலை 8 மணிக்கு நவோத்திர சகஸ்ர சங்காபிஷேக யாக பூசையுடன்ஆரம்பமாகி தொடர்ந்து இரவு 4 ஜாமப் பூசைகளும் நடைபெற்று மறுநாள் செவ் வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு ஸ்ரீநகுலேஸ்வரப் பெருமான் அம்பிகையுடன் எழுந்தருளி கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

அத்துடன் இன்று திங்கட்கிழமை இரவு 11 மணிக்கு தென் இந்தியக் கலைஞர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கும் பக்தி இசை நிகழ்வும் நடைபெறவுள்ளது என நகுலேஸ்வர ஆலய ஆதீனகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர்.

* * * * * *

சுதுமலை ஞானவைரவர் ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு நாளை செவ் வாய்க்கிழமை அதிகாலை ஒரு மணிக்கு பண்டிதர் பொன்.சுகந்தன் தலைமையில் யாழ்.பட்டி மன்றத்தினர் வழங்கும் இன்றைய சமூகத்தில் பெரிதும் பரிதாபத்திற்குரியவர்கள் ஆண்களா? பெண்களா? எனும் தொனிப்பொருளில் சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.

* * * * * *

உரும்பிராய் அருள்மிகு ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி ஆலய பரிபாலன சபையினால் மகா சிவராத்திரி தினத்தினை முன்னிட்டு அண்மையில் யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித் தியாலயத்தில் பண்ணிசைப் போட்டி, சமய எழுத்துத்தேர்வு, பேச்சு முதலிய போட்டிகள் நடத் தப்பட்டன.மகா சிவராத்திரி தினமான இன்று திங்கட்கிழமை மேற்படி போட்டியில் அனை த்து பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவமாணவிகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு காரை எம்.பி அருளானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து சொற்பொழிவுகள், மாணவர்களின் இயல், இசை, நடன நிகழ்வுகள், பக்திகானங்கள், இசை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (அ)

## நோயின் தாக்கம் காரணமாக தற்கொலை செய்த முதியவர்

(யாழ்ப்பாணம்)

நோயின் தாக்கத்தினை தாங்க முடியாது நான் தற்கொலை செய்து கொள்கின்றேன் என கடிதம் எழுதிவிட்டு தற்கொலை செய்த விபரீத சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த 16 ஆம் திகதி இரவு சண்டிலிப்பாய் கல்வயல் பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவசோதி (வயது 69) எனும் முதியவரே இறந்தவராவார்.

குறித்த முதியவர் முள்ளந்தண்டு தேய்வு, முட்டு, தலைச்சுற்று, சலரோகம் ஆகிய நோய்த்தாக்கத்தின் காரணத்தால் இரவில் நித்திரை இன்றி துன்பப்பட்டு வந்துள்ளார்.

இதனால் குறித்த முதியவர் மன உளைச்சலுக்கு ஆளாகி தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டுள்ளார் என தெரியவந்துள்ளது.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-4)





யா/கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் அணிநடை நிகழ்வையும் கோப்பாய் மக்கள் வங்கி முகாமையாளர் அன்சன் சதீஸ் வெற்றி பெற்ற மாணவிக்கு கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# கூட்டமைப்பின் போர்க்குற்ற செயல்களை வெளியிடுவோம்

## முள்ளிவாய்க்காலில் எடுத்த ஆதாரங்களும் உண்டாம் என்கிறது கொழும்புப் பத்திரிகை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்ற செயல்கள் தொடர்பில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைக்குழு அமர்வுகளில் அறிவிக்கப்பட உள்ளதாக கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவை போன்று செயற்பட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் கூட்டமைப்பின் செயற்பாடுகள் குறித்து மனித உரிமைக்குழு அமர்வுகளில் தெளிவுபடுத்தப்பட உள்ளதாக பத்திரிகை செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

மேலும்,தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆரசி புலனாய்வு பிரிவை சேர்ந்த ஐந்து பேர் கூட்டமைப்பின் குற்றச் செயல்கள் குறித்து தகவல்களை வெளியிட்டுள்ளனர். ஒவ்வொரு வாரமும் என்ன செய்ய வேண்டும் என்பதனை புலிகளின் முன்னாள் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினருக்கு அறிவுறுத்தியிருந்தார். பிரபாகரனினால் பெயரிடப்பட்ட மூன்று பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்தனர்.

புலிகளின்முள்ளிவாய்க்கால் பதுங்கு குழிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற ஆவணங்களில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பங்களிப்பு குறித்த தகவல்கள் காணப்படுகின்றதாகவும் செய்தியில் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளினால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல்வாதி வீட்டில் இருக்கின்றாரா? என்ற அரசியல்வாதியின் மகன் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளார்.

இதனிடையே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் ஜெனீவா சென்று நாட்டுக்கு எதிராக பிரசாரம் செய்தால் அவர்களுக்கும் புலிகளுக்கும் இடையிலான தொடர்புகளை வெளிப்படுத்துவேன் என பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, 37 அரசசார்பற்ற நிறுவனங்கள் அரசாங்கத்திற்கு எதிராக பிரசாரம் செய்யும் நோக்கில் ஜெனீவா செல்ல உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

## 24 பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை

(கண்டி)

ஹசகல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 24 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது பிரத்தியேக மோட்டார் சைக்கிள்களுக்கு செல்லுபடியான அனுமதிப்பத்திரம், வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் ஆகியவற்றை வைத்திருக்காததால் அவர்களுக்கு எதிராக பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை ஆரம்பிக்கவுள்ளார்.

கண்டி பிரதி பொலிஸ்மா அதிபர் எச்.என். பி.அம்பன்வெலவின் உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்களில் உதவி பொலிஸ் பரிசோதகர், சார்ஜன்ட்டுகள், கான்ஸ்டபிள்கள் ஆகியோரும் அடங்குகின்றனர். (அ-2)



கடவத்தையில் 152 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாவட்ட நீதிமன்ற நீதவான் கட்டடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

## கொள்ளையரின் கத்திக்குத்துக்கு இலக்கான முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கொள்ளையரின் கத்திக்குத்துக்கு இலக்கான முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தை மாதம் 31 ஆம் திகதியன்று நடைபெற்ற இச்சம்பவத்தில் சிவசம்பு மருந்துக்கடை உரிமையாளரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையாருமான செல்லையா கைலாயநாதன் (வயது 61) எனும் குடும்பஸ்தரே பலியானவராவர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த தினத்தில் தனது கடையினை இரவு 8.15 மணியளவில் பூட்டிவிட்டு அன்றைய வியாபார பணத்தினை எடுத்துக்கொண்டு அம்மன் வீதி, கந்தர் மடத்திலுள்ள தனது வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போது பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள வீரமாகாளியம்மன் கோவிலுக்கும் ஆனைப்பந்திக்கும் இடையில் குறித்த முதியவரை கொள்ளையர் வழி மறித்துள்ளதுடன் கத்தியினாலும் குத்தியுள்ளனர்.

கொள்ளையரின் கத்திக்குத்துக்கு இலக்கான முதியவர் அவ்விடத்திலேயே விழுந்து மயங்கிய நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் 17 நாட்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இக்கொலைக்கு காரணமானவர்கள் இதுவரை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் சிறுதொகைப்பணத்திற்காக இம் முதியவரை கொலை செய்தவர்களை விரைவில் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என வியாபார நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ-4)

# மாகாணமட்ட ஒலிம்பியாட் 2 ஆவது தெரிவுக்கான பயிற்சி

வடமாகாண ஒலிம்பியாட் கணித, விஞ்ஞான 2 ஆவது தெரிவுப்பரீட்சைக்கான பயிற்சி முகாம் ஒன்று நல்லூர் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் எதிர்வரும் 27,28,29 ஆம் திகதிகளில் முற்பகல் 8.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். இப்பயிற்சி நெறிக்கு பின்வரும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்,

சரவணநந்தன் சர்மிகா (வவு/இறம்பைக் குளம் பெண்கள் மகா வித்தியாலயம்), தனராஜ் சுந்தரபவன் (யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), துவாரகன் சூரியகுமாரன் (யா/சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), கோணேஸ்வரன் காருசன் (யா/வரணி மகா வித்தியாலயம்), பரமேஸ்வரன் சேதுராகவன் (முல்/நெத்தலியாறு தமிழ் வித்தியாலயம்), தவராஜா யுவிதா (மன்/சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி), சிவராசா தனலக்சன்(யா/இந்து ஆரம்ப பாடசாலை),ஜேசுதாஸ் சாம்பவி (யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), ஜெயராம் சதீஸ் (யா/சென்ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), பாலகிருஸ்ணன் சிவேகா (கிளி/தர்மபுரம் இல.01, அ.த.க.பா), செபமாலை டெல்மிடா செரீன் (மன்/செ.சேவியா புனித பெண்கள் பாடசாலை), கருணாகரன் கேனுகா (யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்),மோகனகுமார் அன்ரனி றினோசன் (மன்/சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி), ரவீந்திரன் மாதங்கி (யா/இந்து ஆரம்ப பாடசாலை), வைஷ்ணவி துஷ்யந்தன்(யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை),சிறிதரன் தனுசன் (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்), ரங்கநாதன் வாகீஷ் (யா/உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி), ஜெயசந்திரன் மாதவன் (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), கௌரீதரன் தனேசன் (வவு/விபுலானந்தா மகா வித்தியாலயம்), ரவீந்திரன் திஷோக் (யா/இந்து ஆரம்ப பாடசாலை),கோபாலகிருஷ்ணன் கிருசாந்த் (யா/தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயம்), ஜெயகரன் சானுதாங்கி (யா/இந்து ஆரம்ப பாடசாலை),உதயசீலன் சிறித்தனா (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), பிரபாகரன் அருஜன் (வவு/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்).

(அ)

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

உடுவில் வடக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

தலைவராக க.மாசிலாமணி, செயலாளராக மா.அருள்நேசராசா, பொருளாளராக இ.மாணிக்கம், உபதலைவராக மு.பரமநாதன், உபசெயலாளராக அ.நீதிராசா ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்கள் எட்டு பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என தலைவர் அறிவித்துள்ளார். (அ)

## சீனக்கன்ரோன் வர்த்தகக் கண்காட்சி

2012 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கன்ரோன் வர்த்தக கண்காட்சிக்கு யாழ். வணிகர்களையும் அழைத்து செல்லப்படவுள்ளதாக யாழ். வணிகர் கழகத் தலைவர் அறிவித்துள்ளார்.இதற்கான ஏற்பாடுகளை வடமேல் மாகாண கைத்தொழில் சேவைகள் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

இக்கண்காட்சி எதிர்வரும் சித்திரை மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.எனவே இக்கண்காட்சியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் பிரயாணத்திற்குரிய விபரங்களை அறிவதற்கு இல 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழகத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

அதற்கான மேலதிக விபரங்களை பெறுவதற்கு 021 222 2367, 0212228593 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்துவதன் மூலம் தகவலினை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

## சம்பூர் பிரதேச மக்களுக்கு வீடுகள் வழங்க நடவடிக்கை

(திருகோணமலை)

திருகோணமலை- சம்பூர் பிரதேசத்திலுள்ள ஐந்து கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு சகல வசதிகளையும் கொண்ட வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்தவுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் செயற்படுத்தப்படும் இந்த திட்டத்திற்கு இராணுவத்தினரின் பங்களிப்பும் பெறப்படுகின்றது.

இந்த திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக நிர்மாணிக்ககப்படும் 56 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பெரும்பாலும் பூர்த்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம் தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து மீட்கப்பட்டதை அடுத்து சம்பூர் பிரதேசத்தை அரசாங்கம் விசேட பொருளாதார வலயமாக பிரகடனப்படுத்தியது.

இந்த திட்டத்தின் கீழ் சம்பூர் பகுதியில் பூர்வீகமாக வசித்து வந்த மக்களை புதிய வீடுகளில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் காணிகளை சட்டபூர்வமாக நிரூபிப்பவர்களுக்கு இழப்பீடுகளும் வழங்கப்படவுள்ளது. (அ-2)

தூய்மையான மனத்தால் ஞானம் கிட்டும்போது வாழ்வில் அமைதியும் பூலோக சொர்க்கமும் ஏற்படும். –வால்ட்டேர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இளைஞர்களே! சிவராத்திரியின் தத்துவம் உணரத் தலைப்படீரோ!

உலகுவாழ் சைவ சமயத்தவர்களின் மகிமைக்குரிய சிவராத்திரி விரத நாள் இன்றாகும்.

சைவ மக்களின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை வழிபாடாற்றுவதற்கான விசேட தினமாகமகா சிவராத்திரி விரதம் அமைந்துள்ளது.

இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுவதற்காகக் கூறப்படும் புராணக் கதைகள் பல இருக்கின்ற போதிலும் ஒரு மனிதன் பசித்தும், தனித்தும், விழித்தும் இருந்தால் இலக்கை அடைய முடியும் என்பது இவ்விரதத்தின் தத்துவம்.

பசித்திருத்தல் என்பது மிகவும் கடினமான காரியம்.

இன்று உணவு இல்லையென்று நினைத்தாலே பசி இரு மடங்காகிக்கொள்ளும் அளவில் எங்கள் மனநிலை உள்ளது.

எனவே எங்களை நாங்களே கட்டுப்படுத்துதல் என்பதில் முதன்மையானது பசித்திருத்தல்.

உணவைவிடுத்தல்அல்லது சுருக்குதல்என்பதன் மூலம் ஆசாபாசங்கள் கட்டுப்படுத்துப்படுகின்றன.

பசி வந்தால் பத்தும் பறந்திடும் என்ற பழமொழியின் பொருட் செறிவும், இதற்கு அணி சேர்க்கும்.

ஐம்புலன்களை அடக்குகின்ற உபாயத்தில் ஒன்றாக விரதத்தை மேற்கொள்ளும் முறைமை மிகவும் முக்கியமானது.

இங்கு பசித்திருத்தலுடன் தனித்திருத்தலும் சேர்தல் முக்கியமானதாகும்.

பசித்திருத்தல் மூலம் உடலியலின் அடுத்த செயற்பாடு உறக்கமாகும்.

உணவை விடுத்ததும் உடல் அசதி கொள்கிறது. இதன் காரணமாக உறக்கம் மேலோங்குகின்றது.

இங்குதான் உறக்கத்தை கட்டுப்படுத்துதல் இடம்பெறுகின்றது.

உணவை விடுத்தல், உறக்கத்தைக் கட்டுப்படுத்தல் ஆகிய இரண்டும் எங்கள் சிந்தனைக்கு கட்டுப்பட்டு விட்டால், தனித்திருந்து தவம் செய்தல் சாத்தியமாகின்றது.

ஆக! பசித்தும் தனித்தும், விழித்தும் இருப்பதனால் இலக்கை அடைய முடியும் என்பது திண்ணம்.

இத்தகைய உயர் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்ற இன்றைய சிவராத்திரி விரதம் மனப்பக்குவத்தை எம்மிடையே ஏற்படுத்தக்கூடியது.

ஓர் இனம், மக்கள் சமூகம் ஆரோக்கியமாக – பண்பாடு–கலாசார விழுமியங்களைப் பேணுகின்றதாக, வாழ வேண்டுமாயின் அதற்கு ஆன்மிகம் என்பது மிகவும் இன்றியமையாததாகும்.

இன்று நாம் பரவலாகப் பேசிக் கொள்கின்ற கலாசாரப்பிறழ்வு, பண்பாட்டுச் சிதைவு என்பவற்றுக்கெல்லாம் மூல காரணம் இறை நம்பிக்கையில் ஏற்பட்ட தொய்வு என்று கூறிக் கொள்ளலாம்.

ஆலயங்கள் வளர்ச்சி பெற்றன. இராஜ கோபுரங்கள்எழுச்சிபெற்றன.ஆனால்மக்களிடையே ஆன்மிகம் தேய்வடைந்துகொண்டே செல்லலாயிற்று.

ஆலயங்களில் ஏற்படுகின்ற ஒவ்வொரு வளர்ச்சிப் படிகளும் மக்கள் சமூகத்தின் வாழ்வியலிலும் பெறுமதியை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

ஆனால், நடைமுறையில் சிவராத்திரி என்பது நித்திரை கொள்ளாதிருத்தல் என்ற வெறும் நினைப்பில், சினிமாக்குள் புதைந்திருத்தல் என்ற புதுப் பண்பாட்டை ஏற்படுத்திவிட்டது.

இதுதவிர இளைஞர்கள் இரவிரவாக மது போதையில் சுற்றித் திரிதல், புகைத்தலில் இன்பம் பெறுதல் என்றவாறும் சிவராத்திரி சீரழிக்கப்படுகின்றது.

'எனவே எங்கள் இளைஞர் சமூகம் இறை தத்துவத்தை உணர்ந்து கொண்டு ஆலயங்களில் பக்தி பூர்வமான வழிபாட்டில் ஈடுபட பெரியவர்கள் வழிகாட்ட வேண்டும்.

அப்போதுதான் எங்கள் மண்ணில் பண்பாடு பெருகும். கலாசாரம் சிறக்கும்.

# மாசி மகா சிவராத்திரி மகத்துவம்



சிவராத்திரி விரதம், நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி, மகா சிவராத்திரி என ஐந்து வகைப்படும். பன்னிருமாத சதுர்த்தசித் திதிகளில் விரதம் அனுட்டித்து சிவபூசை வழிபாடு செய்வது நித்திய சிவராத்திரியாகும். தைமாத கிருஷ்ணபட்சப் பிரதமை முதல் சதுர்த்தசி வரையான விரத வழிபாடு பட்ச சிவராத்திரியாகவும் மாசிமாத கிருஷ்ண சதுர்த்தசி, பங்குனிமாத முதல் திருதிகை, சித்திரை மாத கிருஷ்ண அட்டமி ஆகியன மாத சிவராத்திரியாகவும் திங்கட்கிழமை முழுநாளும் அமாவாசை நிற்க விரதம் அனுட்டிப்பது யோகசிவராத்திரியாகவும் கொள்ளப்படும்.

சக்தி வழிபாட்டில் நவராத்திரியும் சிவவழிபாட்டில் சிவராத்திரியும் மிகவும் சிறப்பான விரத வழிபாட்டு நாட்களாக பல்லாண்டுகாலமாக எம்மக்கள் அனுட்டித்து வருகின்றனர். மகா சிவராத்திரி விரதச் சிறப்பினைப் புராணவரலாறுகள் பலவாறு எடுத்துக்கூறுகின்றன.

உலகில் பிரளயகாலம் ஏற்பட்ட போது யாவும் அழிந்திடவும் சிவசக்தியானவள் சிவனைவேண்டுதல் செய்து விரதம் நோற்றிட்டு உலகை மீட்டருள வேண்டியதாகவும் அந்த விரத நன்நாளே மகாசிவராத்திரி எனவும் ஆணவ இருளாற் பீடிக்கப்பட்ட பிரம விட்டுணுக்கள் தாம் தாமே பெரியவர்கள் என அகந்தை கொண்டு வாதிட்டபோது எம்பிரானான சிவன் சோதிவடிவாகி நிற்க இருவரும் அச்சோதி வடிவின் அடிமுடி தேடிக்கண்டறியாது அகந்தை நீங்கி சிவபிரானைப்போற்றிப் பணிந்த நன்நாளே மகாசிவராத்திரி விரதநன்நாள் எனத் தட்சகாண்டமும் எடுத்துக்கூறுகின்றன.

இறைவழிபாட்டிலும் இவ்வுலக வாழ்வியலில் நாம் எப்படி மன ஒருமைப்பாட்டுடன் விழித்திருந்து கருமம் ஆற்றி வேண்டும் வெற்றியைப்பெறுவது போல எமது ஆணவ இருளகல மனம் ஒருமித்து உள்ளன்புடன் ஊண், உறக்கமின்றி இறைவனை வேண்டுதல் செய்தால் என்றும் எமது அஞ்ஞான இருளகன்று மெய்ஞ்ஞானஒளி நிலைக்கும் என்பதை மகா சிவராத்திரி வழிபாடு நன்கு உணர்த்துவதாயுள்ளது.

மணிநவ நிதியம் பூக்கும்
மாசில்லாத் தெருளுண்டாக்கும்
அணிசிவகருமம் தேக்கும்
அட்டஜசுவரியங்காக்கும்
பணிபுனை சுந்தரேசர்
பயிலு நோன்புளவைக்கு மேலாம்
திணிதிருத்தவத்தின் முன்னாஞ்
சிவநிசி என்றுமாதே

என சிவவிரதத்தின் மேன்மையை உபதேச காண்டம் அழகாக எடுத்துக் கூறுகின்றது. இந்நன்நாளில் நாமும் விழிப்புடன் வழிபாடாற்றி வேண்டும் நல்வாழ்வு காண்போம்.

நீர்வைமணி

# சந்தேகநபர்களின் பிணைமனு நிராகரிப்பு

தென்மராட்சி கெற்பெலி பகுதியில் கடந்த 10 ஆம் திகதி பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவியை கடத்திச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் கொடிகாம பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரு சந்தேகநபர்களுக்கான பிணைமனு கடந்த 14 ஆம் திகதி சர்வகச்சேரி நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுவை விசாரணை செய்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா அம்மனுவை நிராகரித்து தொடர்ந்து இரு சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அதேவேளை கடத்தப்பட்ட மாணவியை கடந்த 14 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்திய போது மாணவியைப் பெற்றோருடன் செல்ல நீதவான் அனுமதி வழங்கினார். (அ-3-29)

# சிவராத்திரிகால ஆன்மீக சமூக வேலைத்திட்டங்கள்

சிவத்தமிழ் மானுட விடியற் கழகம் சிவராத்திரி தினத்தை அண்டிய காலப் பகுதியில் சிவவாரத்தை அனுஷ்டித்து வருகின்றது.

இதற்கமைய கடந்த 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் இன்று திங்கட்கிழமை வரை ஆலய சமூக மையம் எனும் தொனிப்பொருளில் சிவவாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

விசேட செயற்பாடாக இன்று திங்கட்கிழமை திருக்கேதீஸ்வர சிவனருள் இல்ல அறக்கட்டளையின் அனுசரணையுடன் எமது கழகம் சிவத்தமிழ் மகாநாடு ஒன்றையும் நடத்தி வருகின்றது.

இந்த மகாநாடு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் உள்ள கிராமங்களில் எமது கழகத்தால் நடத்தப்படும் 60 சிவத்தமிழ் அறநெறி பாடசாலையைச் சார்ந்த ஆசிரியர்களுக்கும் கிராம மட்ட செயற்பாட்டாளர்களுக்குமான வதிவிட செயலமர்வாகவும் சமய, சமூக ஆர்வலர்களது ஒன்றுகூடலாகவும் அமையும்.

இந்த சிவவார தினத்தில் சிரமதானம், இரத்ததானம், ஜீவகாருண்ய சேவைகள், ஏழை மாணவர்களுக்கான கல்விப் பணி, மரம் நடுகை என்பவற்றுடன் இளைய தலைமுறையினரிடையே ஆன்மீக சிந்தனைகளை விதைக்கும் வகையில் யோகாசனம், தியானம், அறநெறி அறிமுகங்களை கிராமிய மட்டத்திலும் செய்து வருகின்றது.

மேற்படி செயற்றிட்டம் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு கிளிநொச்சி, கண்டி வீதியில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயத்திலுள்ள எமது சிவத்தமிழ் அறநெறி மையத்திலோ அல்லது நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியில் அமைந்திருக்கும் மூத்ததம்பி அன்னதான மண்டபத்தில் உள்ள எமது மானுடன் சிறுவர் நல்வாழ்வு மையத்திலோ தொடர்பு கொள்ளமுடியும் என சிவத்தமிழ் அறநெறி மைய இயக்குநர் அறிவித்துள்ளார். (அ)

# கதாப்பிரசங்கம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் அருள்மிகு பழனி ஆண்டவர் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் இரவு நான்கு ஜாமப் பூசைகளும் இடம்பெறும். அத்துடன் இரவு 10.30 மணிக்கு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சி.வை. நித்தியானந்த சர்மா இனிய பக்க வாத்திய சகிதம் சங்கீத கதாபிரசங்கம் நிகழ்த்துவார். (அ)

# மகா சிவராத்திரி வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள கடையிற் சுவாமிகள் குரு வார அன்னசத்திர சிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி விரதப்பூஜை இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து எட்டு சாம சிறப்பு பூஜை வழிபாடுகளும் இடம் பெறும். (அ-4)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## நல்லன, மிக நல்லன, நனி சிறந்தன



என் இளஞ் சிங்கங்களே செல்லுங்கள்! அனை வரும் செல்லுங்கள். எங்கெல்லாம் கொள்ளை நோய்களோ, பஞ்சமோ, பட்டினித் துன்பங்களோ அங்கெல்லாம் சென்று அந்தப் பாமர மக்கள் படும் துன்பங்களைத் தவிர்க்க முயல்வீர்களாக! இந்த உன்னத முயற்சியில் அதிகமாகப் போனால், நீங்கள் ஒருவேளை உயிரிழக்க நேரலாம். நேரட்டுமே, அதனால் என்ன? புழுக்களைப் போல, அன்றாடம் பிறந்து இறந்து வீணே மறைந் தொழியும் மக்கள் உங்களைப் போல எத்தனை நஷ்டம் வந்துவிட்டது? என்றேனும் ஒரு நாள் நாம் இறக்கத்தான் வேண்டும். அந்த இறப்பு ஒரு உயர்ந்த குறிக்கோளுக்காக உயிர் துறப்பது மேலல்லவா? நாட்டின் பொன்னான எதிர்காலமே உங்களைத்தான் சார்ந்திருக்கிறது. நாட்டின் வருங்கால நம்பிக்கைகள் உங்களை எதிர்நோக்கியுள்ளன. எனவே செயலற்று, வாழ்க்கையை வீணே கழித்துக் கொண்டிருக்கிற உங்களைப் பார்க்கும் போது என் மனம் சொல்லொணா வேதனை உறுகின்றது. உழைப்பில், உயரிய உழைப்பில் ஈடுபடுவீர்களாக! இதில் தாமதம் சிறிதும் வேண்டாம்.

# இறைமை மறுக்கப்பட்டதாலே...

தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் மனித உரிமைகள் தொடர்பில் கே.தயாபரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இதில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

இந்த நாட்டிலுள்ள ஒற்றையாட்சி முறையில் நாம் சமபிரஜைகளாக வாழ முடியாது. எனவே அது நீக்கப்பட்டு சமஷ்டி முறை உருவாக்கப்பட்டு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் அல்லது ஆட்சி அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு அரசியல் சாசன ரீதியாக ஒழுங்குகள் செய்யப்படவேண்டும்.

பெரும்பான்மையினம் தாம் பெரும்பான்மையாக உள்ள காரணத்திற்காக சிறுபான்மையினத்தை ஆட்சி செய்ய முடியாது. அவ்வாறு புரிந்தால் அந்த சிறுபான்மை இனத்தின் இறைமை மறுக்கப்படுகின்றது. இதுவே இங்கு நடந்தது. அதனாலேயே இங்கு போராட்டங்களும் சகல பிரச்சினைகளும் ஏற்பட்டன.

ஒரு நாட்டில் வெவ்வேறு இனங்கள், மக்கள் வாழ்வதாக இருந்தால் அவ்வகையான மக்களுக்கு இயைபாக இருக்கவேண்டும். அவ்விதமான தீர்வொன்று ஏற்படாமையினால் தான் யுத்தம் வெடித்தது. காரணமில்லாமல் ஒரு யுத்தம் ஆரம்பிக்கவில்லை.

ஆனால் இன்று யுத்தத்தின் பின்னர் நாம் போராட்டத்தின் அடுத்த நிலைப்பாட்டிற்கு சென்றிருக்கின்றோம். யுத்தம் நடந்ததற்கான அடிப்படையான காரணம் தமிழர்களின் நியாயமான உரிமைகள் மறுக்கப்பட்டது.

ஒரு அரசியல் தீர்வு இந்த நாட்டில்ஏற்பட வேண்டும். ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகள் மதிக்கப்படவேண்டும். இலங்கை அரசினால் என்ற காராணம் ஒருபக்கம் விசாரணை குற்றங்கள் மறுபுறம் இந்த சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு என்ன செய்யப் போகின்றது என்று கேள்வி. அதை எவ்வாறு செய்யப் போகின்றோம் என்ற கேள்விசர்வதேசத்தின் முன்னால் இன்றுஉள்ளது.

நாம் தமிழ் மக்கள் சார்பாக சர்வதேசத்திடம் கேட்பது இந்த நாட்டில் நாம் வாழ்ந்துள்ளோம். மற்றவர்களைப் போல், அவர்களை விடவும் உரிமைகளைக் கேட்டதற்காக பாரிய அழிவுகளைச் சந்தித்திருக்கின்றோம்.

இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் மீண்டும் இனப்படுகொலை நடைபெறும். வன்முறை நடைபெறும் அதற்கு சர்வதேசம் இடமளிக்கக் கூடாது. அதிலிருந்து எம்மை பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமை இதையே பகிரங்கமாக சர்வதேசத்திடம் கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இனிமேல் சர்வதேசம் எமது பிரச்சினையை எந்தெந்த வகையில் தீர்க்க முடியுமோ அந்தந்த வகையில் தீர்த்துவைக்க வேண்டும் அது அவர்களது கடமை என்றார். (எ-11)

# பொலிஸ் அதிகாரம்...

மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அண்மையில் தெரிவித்ததாக பத்திரிகையில் வெளியான செய்தி பற்றியும் ஊடகவியலாளர்கள் முதலமைச்சர் சந்திரகாந்தனிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த கிழக்கு மாகாண முதலமைச்சர் பத்திரிகைக்கான பேட்டியொன்றின் போதுதான் அவ்வாறு கூறியதாகத் தெரிவித்தார்.

எனினும் இன்றைய மாநாட்டிற்கும் ஊடகவியலாளர்களின் கேள்விக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஆனால் 13வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என நம்புவதாக சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

இதேவேளை அனைத்து மாகாண சபைகளும் ஐக்கியத்துடன் மக்கள் நலன் மேம்பாட்டு திட்டங்கள், கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் வீதி அபிவிருத்தி ஆகிய துறைகளிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இந்த மாநாட்டில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதென முதலமைச்சர்கள் தெரிவித்தனர்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட முதலமைச்சர்கள்,

இந்த அபிவிருத்தித் திட்டங்களை அமைச்சுகளின் மூலமாகவும் மாநாட்டிற்கு சமுகமளித்திருந்த அரசாங்க நிறைவேற்று அதிகாரிகள் ஊடாகவும் முன்னெடுப்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

அரச கல்விக் கொள்கையின் பிரகாரம் ஐயாயிரம் ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் ஆயிரம் முன்னணிப் பாடசாலைகளின் மேம்பாடு தொடர்பாக அனைத்து மட்டங்களிலும் செயற்படுத்துவது குறித்து இதன்போது தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் தோட்டப் புற பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை உட்பட பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் முதலமைச்சர்கள் மாநாட்டில் இணக்கம் காணப்பட்டுள்ளன என கூறினார். (எ-11)

# கனடா ஆசைகாட்டி...

மொன்றில் இவர் கடமையாற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கனடாவுக்கு செல்வதற்கு குறித்த நபரிடம், முஸ்லிம்கள் மூவரும் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 266 பேரும் தலா ஐந்து இலட்சம் ரூபாய் முதல் 25 இலட்சம் ரூபாய்வரை பல கட்டங்களாக கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரையும் முன்னாள் விடுதலைப் புலிகள் எனக் கூறுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இவர்களை ஆபிரிக்க நாடுகளுக்கு கூட்டிச் சென்று, அந்தநாடுகளில் தங்க வைத்து விட்டு பின்னர் விஸா காலாவதியானதால் அந்நாட்டு பொலிஸாரிடம் பிடிபட வைத்து அவர்களை இலங்கைக்கு மீண்டும் நாடுகடத்த வைப்பதுடன் அவர்களிடமிருந்து பெற்ற பல இலட்சம் ரூபாயுடன் வசதியான நாடொன்றுக்குச் சென்று அங்கு தங்கிவிடுவதே இவர்களின் திட்டமாகும்.

சிங்கப்பூரிலுள்ள நண்பன் ஒருவர் பணத்தாசை காட்டியதாலேயே இவர் இந்த மோசடியில் ஈடுபட்டு 269 பேரையும் ஏமாற்றி ஒவ்வொருவரிடமும் பெரும்பாலானோரிடம் 25 இலட்சம் ரூபாய்வரை பெற்று கோடிக்கணக்கான ரூபாய் பணத்தை சுருட்டியுள்ளார்.

டோஹோவுக்கும் 209 பேரையும் மாலிக்கு 60 பேரையும் எதியோப்பியா எயார்லைன்ஸ் மூலமே அனுப்பி வைத்துள்ளார்.

ஒரே நேரத்தில் இந்தளவு பேர் ஆபிரிக்க நாடுகளுக்கு ஏன் செல்கிறார்களென்ற சந்தேகம் விமான நிலைய அதிகாரிகளுக்கு ஏற்படுவதைத் தடுப்பதற்காக ஒவ்வொருவரும் தங்கள் கடவுச் சீட்டுகளுக்குள் நூறு டொலரை வைத்து அதிகாரிகளிடம் அவற்றைக் கொடுக்க அவர்களும் அவற்றை எடுத்துக் கொண்டு எதுவித கேள்வியும் கேட்காது அனுப்பி வைத்துள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பணத்தைப் பெற்றவர்கள் கனடாவுக்கு அனுப்பப்படாவிட்டால் அவர்களுக்கு மீண்டும் பணம் ஒப்படைக்கப்படுமென வெற்று பேப்பர் ஒன்றில் முத்திரை ஒட்டி கையெழுத்திட்டு கொடுத்துள்ளார். ஆனால் இதுவரை எவருக்கும் பணத்தை ஒப்படைக்கவில்லை.

பிரதான சந்தேகநபரைக் கைது செய்துள்ளதால் அடுத்த கட்டமாக சிங்கப் பூரிலுள்ள இவரது நண்பனையும் விரைவில் கைது செய்யவுள்ளதாக குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைவிடப்பட்டு அந் நாட்டில் திறந்தவெளி தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 209 இலங்கைத் தமிழர்களில் பத்து பேர் வரை கடந்த இருவாரங்களில் நாடு திரும்பியுள்ளனர். மிகுதிப் பேர் டோஹோவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (எ-11)

# ஐ.நா. கூட்டத் தொட...

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின்கூட்டத்தொடரில்இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை ஆதரிக்கப் போவதாக அமெரிக்கா உத்தியோக பூர்வமாக தெரிவித்திருந்ததையடுத்து இக் கூட்டத்தொடரில் 52 இலங்கை பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தொடரில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர்கள் மகிந்த சமரசிங்க, நிமால் சிறிபால டி சில்வா, ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதின், அனுர பிரியதர்சன யாப்பா, ஜோன் செனவிரத்ன, டிலான் பெரேரா மற்றும் சஜின்வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளின் குழுவுக்கு அமைச்சர்கள் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் மகிந்த சமரசிங்க ஆகியோர் தலைமை தாங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவுக்கு அடுத்தவாரம் விஜயம் செய்யவுள்ள இலங்கை பிரதிநிதிகள் குழு உண்மைகளை கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டு இரண்டு மாதங்களே கடந்துள்ள நிலையில் அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த போதிய கால அவகாசம் தேவையென்ற வாதத்தையே முன்வைக்கவுள்ளதாக தெரியவருகின்றது. (எ-11)

# மற்றொரு ஆவணப்படத்...

இந்த ஆவணப்படம் வெளியிடப்படவுள்ளது. இலங்கையின் கொலைக்களங்கள் எனும் ஆவணப்படத்தை தயாரித்து வெளியிட்ட ஜோன் சினோ என்ற ஊடகவியலாளரே இந்த ஆவணப்படத்தையும் வெளியிடவுள்ளார்.


பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி இவ் ஆண்டுக்கான தமது நிகழ்ச்சித் தயாரிப்பு தொடர்பாக வெளியிட்ட செய்திக் குறிப்பில் இலங்கையின் கொலைக்களங்கள் எனும் ஆவணப்படத்தின் 2ஆவது பாகத்தை புதிய போர்க்குற்ற ஆதாரங்களுடன் வெளியிடப் போவதாக தெரிவித்திருந்தது.

இந் நிலையில் சனல் 4 தொலைக்காட்சியின் இந்த புதிய ஆவணப்படம் ஜெனிவாவில் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப்படத்தினை வெளியிட்டு இலங்கையின் போர்க்குற்ற மீறல்களை உலகிற்கு அம்பலப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய சனல் 4 தொலைக் காட்சி குழுமம் 2012ஆம் ஆண்டுக்கான நோபல் சமாதான பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (எ-11)

மின் பிறப்பாக்கி விற்பனை
England நாட்டு தயாரிப்பான Perkings Turbo ரக 60KVA வலுவுள்ள மின் பிறப்பாக்கி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
0777446527
(அ-5876)

மெகா அதிரடி
NALIN
HP AUTHORIZED DEALER



இன்றைய கணணி விலையின் அதிகரிப்பின் மத்தியில் (Assembled கணணியை விட குறைந்த விலையில்) ஒரு புத்தம்புதிய Hp Compaq Branded Pc யினை மிக மலிவான விலையில் பெற்றுக்கொள்ளுங்கள்.
(Dual Core,i3 i5) 20" LCD Monitor உடன்
Luxan Plaza, Kasthuriyar Road , Jaffna. Ph : 0777667975, 2220838.
195/2, Parameswara Junction, Jaffna. Ph : 0777667974, 2221121 ,2221166

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.